# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 13<br>இதழ்: 2 | பிலவஹு வைகாசி மீ<br>மே—ஜூன் '61 | வருட சந்தா<br>ரூ. 3-00 |




வளர்ப்புத் தந்தை நரசிங்க முனையரையர்,
சுந்தரர்க்கு உபநயனம் செய்து மகிழ்தல்.

பக்கம் 57

## உள்பொருள்


பக்கம்

1. அதிரும் கழல் (திருப்புகழ்மணி) ... 49
2. பாம்பனடிகளும் பன்னிருகைப் பெருமானும் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., P.T.,) ... 53
3. வைதிகத் திருவும் மன்னவர் திருவும் (கி. வா. ஜ.) 57
4. திருச்செங்கோடு திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 59
5. அயில்வேல் அரசன் (கி. வா. ஜகந்நாதன்) ... 67
6. அபேத அனுபவம் (அன்பன்) ... 72
7. சேய்த்தொண்டர் புராண வசனம் (தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை) ... 78
8. பாபநாச நமசிவாயம் (ரசபதி) ... 85
9. UNIVERSALISM OF LIFE AND BEING (*Thiruppugal Mani*) ... 95


---


### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் சேர்ந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள *3–50* விதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. *1.*

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : முத்துஸ்வாமி

| | | |
|---|---|---|
| மலர் 13 | பிலவஞூ வைகாசிமீ<br>மே-ஜூன்—1961 | இதழ் 2 |


## அதிரும் கழல்
(திருப்புகழ் மணி)

சப்த சுவரூபமாய் எங்கும் நிறைந்துள்ள ஆண்டவனுடன் கலப்பதெப்படி? அவனுடைய நாமங்களைப் பாடினால் அந்நாம ரஸமாயுள்ள அவனுடன் கலக்கலாம். அவ்வாறு கலந்து அனுபவித்தவரே அனுபூதிமான்கள். அவர்கள் அனுபவங்களே திருப்புகழாயும், தேவாரமாயும், திருவாய்மொழியாயும் வெளிவந்திருக்கின்றன. அப்பாடல்களைப் பாடினால் வெகுநாள் வரையில் அந்த அனுபவம் உள்ளே நிலைத்து நிற்கும். பெருங்காயச் செப்பில் சந்தனத்தை வைத்தாலும் பெருங்காய மணமே மேல்கொண்டு வீசுவதுபோல், தெய்வ மணங்கமழும் முருகனுடைய திருவடியை உள்ளத்திலேற்றி வைத்துவிட்டால், அந்தச் சரணாரவிந்தத்தின் மணமே எங்கும் வீசும்.

---

வாயிடுநீர் கொப்புளிப்பார் உண்பார்கள் போல்,பிறரைக் காய்வார், கழுத்தறுப்பார், காப்பாரும் உள்ளாரே.

முருகனுடைய திருவடி தேவர் தலையிலும், வீடு என்னும் மோக்ஷத்திலும், பெரிய வனங்களிலும், தினைப்புனத்திலும் நிறைந்து கமழ்கிறதாம். பகவானுடைய பாதாரவிந்தம் எங்கும் நிறைந்திருப்பதால் அதை "அதிரும் கழல்" என்றார் அருணகிரியார். சில பொருளின் அதிர்ச்சியால் மனிதர் இறந்துவிடுவர். ஆண்டவனுடைய கழல்களின் அதிர்ச்சியால் வினைகள்∘அழிந்து விடுகின்றவாம்.

நானென்ற உணர்ச்சியற்று, உயிரிலிருந்து உண்டாகும் உணர்ச்சியே தெய்வீக உணர்ச்சி. அந்த உணர்ச்சியினால் உயிருக்குயிரான முருகனிடமிருந்து சக்தியைப் பெற்றுக் கொள்ளுகின்றனர் தொண்டர்கள். உடம்பில் தானென்ற உணர்ச்சி யிருப்பதுதான் ஜயவுணர்ச்சி.

நானென்ற உணர்ச்சியற்று எங்கும் முருகன் என்ற உணர்ச்சி மிகுந்த ஞானியர் உள்ளத்தில் முருகனுடைய சரணாரவிந்தமாகிய தெய்வீக மலர் மலர்கின்றதாம்.

தாமரை சேற்றிலே பிறந்து, நீரிலே நாளம்விட்டு வெளிக்கிளம்பி மலர்ந்து; தன் மலர்ச்சியை ஜோதி ஸ்வரூபனாகிய சூரியனுக்கு அர்ப்பணம் செய்கிறது. அதுபோல் ஞானிகள் மண்ணிலே பிறந்து, பேதமாகிய சமுசாரக் கடலிலே வளர்ந்து, ஆனால் அதிலொட்டாது மேலே கிளம்பி மலர்ந்து, அதாவது உடலிலுள்ள ஆறு ஆதாரங்களையும் தாண்டி, ஏழா

---

உணவாகக் கள்ளைக் குடியர் உவப்பதுபோல்
நணலாகார் முன்னர். நடிப்பார்கள் சில்லோரே.

வது ஆதாரமாகிய பிரம்மரந்திரத்தி லுள்ள பிரம்ம ஜோதிக்குத் தன் மலர்ச்சி, மணம், அழகு முதலிய வற்றை அர்ப்பணம் செய்கின்றனர். தாமரையை ஞானிகளுக்கு உவமை யாக்கிக் கூறி யுள்ளனர் சித்தர்கள்.

"நீரிலே முளைத்தெழுந்த தாமரையி னேரிலை
நீரினோடு கூடிநின்று நீரிலாத வாறுபோல்
பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப்ப ராபரம்
பாரினோடு கூடிநின்ற பண்புகண்டு அறிந்திரே.

என்றனர்.

இறைவன் ஆகாயமாய், வாயுவாய், அக்னி, ஜலம், பூமி, தானியம் முதலியவைகளா யுள்ளான் என்று கூறுகிறது உபநிஷத். "ஆகாசாத் வாயு:, வாயோரக்னி:, அக்னி, ராப: ஆப: ப்ருதிவீம், ப்ருதிவ் யோஒளஷத: என்பதே அது.

இக்கருத்தையே தாயுமானவர் "விண்ணே, விணு தியாம் பூதமே" என்று கூறியுள்ளார்.

இறைவனைத் தெரிந்து கொள்ளும் பண்பே வேதம். ஜீவராசிகளுக்கெல்லாம் வேதம் என்ற அறிந்து கொள்ளக் கூடிய பண்பை ஆண்டவன் கொடுத்துள்ளார். அந்தப் பண்பு வேறல்ல; ஆண்டவன் வேறல்ல. இந்த வேதத்தை அசுரன் திருடிக் கொண்டுவிட்டானும். அதை வராக ரூபமெடுத்து பகவான மீட்டுக் கொண்டு வந்தான் என்றது புரா ணம். இதன் கருத்தென்ன?

---

பாழ்குடியர் செய்கைகளால் பல்துன்பம் நேர்வதுபோல்
வாழ்வறியா மந்தர்களால் நல்லோர் வருந்துவரே.

"எந்த மனிதன் அறிவில்லாம லிருக்கின்றானோ அவனுள்ளே ஆண்டவன் வராக (பன்றி) ரூபமாகப் புகுந்து, தன் கொம்பினால் அவன் அறியாமைப் பகுதியைக் கொத்திக் கிளறி அறிவின் வடிவாய் அவனை வெளிக்கொண்டு வருகிறார் என்பதே வராகாவதார தத்துவம். பக்தியினால் பகவானிடத்தில் ஈடுபடும் காலத்தில் சற்று ஆராய்ச்சியும் வேண்டும். உள்ளத்தில் ஆண்டவனைப் பிரார்த்தித்து இது எனக்குப் புரிய வில்லையே என்று கேட்டால், அவன் உள்ளத்தி லிருந்து உண்மையை யுரைப்பான்.

உணர்ச்சியுடன் முருகாவென்று ஒருதரம் அழைத்தால், அவன் ஓடிவந்து அவர்களுடைய தலை மேல் தன் திருவடியை வைத்து விடுகிறானாம். அவன் திருவடிபட்ட தொண்டர்களுடைய தலையில் பிரம்ம னுடைய எழுத்து அழிந்து விடும். அங்கு முருக னுடைய திருவடியைத்தான் பார்க்கலாம். முருக னுடைய திருவடியி லிருக்கும் கழல், தொண்டர் களுடைய உள்ளத்தில் அதிர்ந்து, வினைகளை எரித்து, அபய நிலையைத் தந்துவிடுகிறது. எந்த இடத்தில் புகுந்தால் பயமில்லாம லிருக்குமோ அந்த இடமே அபயநிலை. ஒரு ஜீவன் மற்றொரு ஜீவனுக்குத் துன்பம் செய்யாது அன்பே செய்யும் என அறிந்து, இரண்டின் இதயமும் கலப்பதே அபயநிலை. அதுவே முருகனுடைய சரணம். அவன புகழைப் பாடி சரணத்தைப் பற்றுவோம்.

---

கட்டமுறு காலத்தில காவாத நண்பர்கள்தாம்,
இட்டமிலாச் சேயை ஏந்துனர்கள் போல்வாரே.

## பாம்பனடிகளும் பன்னிருகைப் பெருமானும்

(திருப்புகழ்சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.)

### பெங்களூரில் பெற்ற அருள் :

நமது அடிகளார் 1928ம் ஆண்டு மே மாதத்தில் பெங்களூரில் ஒரு பெரிய மாடிவீட்டில தங்கி யிருந்தார். ஓரிரவு அடிகளார் படுததுக்கொண் டிருக்கும்போது ஒரு பேரொளி அவரை இடப்புறம் வலப்புறமாகச சூழ்ந்திருககக் கண்டார். அவ்வொளியில் ஒரு சிறுபகுதி அவரது வாய்வழியாக உள்ளே நுழைந்தது. அது வேகமாகச சென்று அவரது உள்ளக் கமலத்தைக் கிளப்பலாயிற்று. அதனுலவர்க்கு மகிழ்ச்சி பெருகியது, "நான வெளியே செல்பவனுனேன். என் உயிர்த் துணைகளாம் வேலும் மயிலும் வருக" என இரண்டு முறை கூறினர். உடனே அவ்வொளிகள் மறைந்துவிட்டன. அடிகளுக்கு உடல்நல நயப்பு எய்தலாயிற்று.

### உள்வொளி உண்மை :

ஒளி எனபது ஐம்பெரும் பூதங்களுள் ஒன்ருன தீயின் தொடர்புள்ளது. அது புறக் கணணுக்கு விஷயமாவது என்றும், அகக் கண்ணிறகு அநுபவமாவதெனறும் இருவகைப் படும். புறக்கண்ணுககு மட்டும் தெரிவது புறவொளி எனப் படும் உள்ளத்துள் ஓங்கி ஒளிாவது உள்ளொளி எனப்படும். ஞானியாகட்கு இவ்வொளி உளளும் புறமும் ஒருஙகே காட்சி யாகும. இது அருணகிரியார் அநுபவமுமாகும்.

"எநதனுள ஏகசெஞ் சுடராகி
என்கணில் ஆடு தழல்வேணி எந்தையர்"

என வருவது காண்க. மேலும் இவ்வொளி மயமான இறைவன், தன் அருட்சுடரை அடியவர்களது உள்ளும் புறம்பும், கீழ் மேல் பககஙகளிலும் சூழச்செய்து, அருடசுடர் மண்டலம்-என்ற

---

வல்லாராம் செலவர்களை ஊட்டுவம்யாம் என்பவர்கள்,
கலகிள்ளிக் கைநோகும் காரியத்தர் ஆவாரே.

மதியும் கதிரும் இலாது விளங்கும் மஹா தேஜோ மண்டலத்துக் குரியவராகச செய்வான். இந்த அநுபவத்தை நம் மணிவாச கப் பெருந்தகையார்,

"சோதியே! சுடரே! சூழ் ஒளி விளக்கே!"

என்றனர். இங்குச் சோதி என்றது, ஆண்டவனது சர்வ வியாபகமான, உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய அலகில் சோதியான அருட்சோதி. கண்ணுக்கு மட்டும் காட்சியாகும் மதியும் கதிரும் போனறு இருக்கும் நிலை சுடரே எனவும், உள்ளேயும் புகுந்து உள்ளக கமலத்தை மலர்த்தி உள்ளும் புறமும் எழும் நிலையை 'சூழ் ஒளிவிளக்கே' என்றும் கூறினர். இவ்வித ஒளி நம்முள் ஒளிர நேரும்போது அகங்கார மமகார மான நான, எனது என்பவை வெளியேறிவிடும். இதுவே நமது பாம்பன் அடிகளார் பெற்ற அருளநுபவமாகும்.

## உண்மை ஞானியரே ஒளியுலகத்தவர்:

'பரமே பாரததிருப்பர் பதார்த்தங்கள் பாரார்' என்றபடி, எங்கும் நிறைநத அருட்சோதி ஆண்டவனைக் காணும் பெற்றி யரான ஞானிகள் மருளநிறைந்த உலகிலிருந்தாலும், அஞ்ஞான இருள் நீங்கிய ஞான ஒளியிலேயே சஞ்சரிப்பர். இவர்கள் ஒளியிலேயே சஞ்சரிக்கும் புருப் போன்றவர் என்பர் பாம்ப னடிகள். அவ்வித அருளொளி உலக நடையினை விரும்பு வோர், இரவிலும்கூட இருட்டறையில் உறங்கலாகாது என்பது வடலூர் வள்ளல் வகுத்த வாய்மை. இநதத திருவாக்குக்கு இலக்கியமான அற்புதம் ஒன்று பாம்பனுர் வாழ்க்கையில் நடந்தது கேளுங்கள்:

பெங்களூரில் தங்கியிருந்த இரவு ஒன்றில் இவரது அறை யில் கம்பி வழியாக ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. திடீரென அது அணைந்துவிட்டது. காரிருள சூழ்ந்தது. பாம்பனடிகள் விழித்துப் பார்த்தனர். அவரைச் சூழ்ந்து

---

எனகிணறே மேலென் றீசைக்கும் தவளை யெனத
தன்கலவி யெண்ணித் திருக்குருடும் உள்ளனரே.

நான்கு தீவட்டிப் பந்தங்கள் எரிந்து ஒளி செய்துகொண்டிருந்தன. அவற்றைக் கண்டு நம் அடிகளார் எழுந்தனர். உடனே அவை மறைந்தன. அடிகளார் கைகூப்பி "செம்மேனிச் செழுஞ்சுடரே! எளியேன் இருளில் உறங்குதலைக் காணச் சகியாமல், தீவட்டியால் அருளொளி காட்டிய நின் கருணையிருந்தவா றென்னே!" எனப் போற்றி நின்று வேறு விளக்கு ஏற்றிக் கொண்டனர். இருளுலகம் சேராதவாறு இவ்வேலிறை ஆட்கொண்ட திறமிதுவன்றோ!

## முன்னறிவிப்பு :

முருகனை வணங்கும் முதுகிய அன்பர்கள் பின்வரு நிகழ்வை முன்னுற அறிவர். நமது சுவாமிகள் 1928ல் சென்னைக்குத் திரும்பினர். கந்த சஷ்டி விழா, மயூரவாகன சேவன விழா, மகாசிவராத்திரிப் பூசையும் சிறக்க நடத்தினர். சில நூல்களையும் அச்சிட்டனர். 1929 (சுக்கில) ஆண்டுக் கோடையில் சென்னையிலேயே இருந்தனர். வைகாசித் திங்கள் 2ம் நாள் புதன்கிழமை பகல் 11 மணிக்கு சோதிடர் சின்னசாமிப் பிள்ளையை அழைத்தனர். அவரிடம் "இறைவன் திருவுளக் குறிப்பு ஒருவாறாகக் காணப்படுகிறது. திருவான்மியூரில் ஒரு நிலம் விரைவில் ஏற்பாடு செய். இத்திருநீற்றினை அணிந்துகொண்டு அக்காரியத்திற்குச் செல்" என நீறளித்தனுப்பினார். திரு. ஞானசாகர முதலியார் என்பார் சுவாமிகளைப் புதுப்பாக்கம் வரும்படி வேண்டினார். அடிகளார் "நான் அங்கு வரமாட்டேன். திருவான்மியூருக்குப் போகிறேன்; அங்கு வா" என்றனர். பின்னர் அவ்வாறே நிலமும் திருவான்மியூரில் வாங்கப் பெற்றது. சுவாமிகள் தமது சீடர்களை நோக்கி மயூரவாகன சேவன விழாவை விடாது நடத்துமாறும், தமது உடலைத் திருவான்மியூரில் சேர்த்து விடும்படியும் கட்டளையிட்டனர். மறுநாள் காலையில் வழக்கப்படி நீராடித் தமது பூசை முடித்து அமர்ந்திருந்தனர்.

---

*அமைதியறி(வு) இல்லார் அரியகலை கற்றல்,*
கமையின்றி நாத்திகத்திற் காலாழ்வர் கண்டாமே.

**செவ்வேளடி சேர்தல் :**

உடல் நீங்கும் உண்மையை உய்த்துணர்ந்த சுவாமிகள், பல் வேறிடங்களில் உள்ள சீடர்களை ஒன்றுகூட்ட எண்ணிப் போலும் ஒருபாயம் செய்தனர். அதிக வெப்பத்தால் உண்டாகும் உடல இளைப்பைப் பொருமல் பெங்களூர் செல்வதாக அறிவித்தனர். அதற்காகப் பயணச் சீட்டும் வாங்கிப் பலர் அடிகளாரை வழியனுப்ப ரயிலடியில காத்திருந்தனர். (29-5-29) புதன் நாளாகிய அன்று சிலர் சுவாமிகள் இருந்த நிலையத்திற்கும் வந்தனர். சுவாமிகள சற்றுக் களைப்பால் அசைவற்றிருநதார். பயணம் நின்றது. அதி உஷ்ணத்தால் நேர்ந்த இரத்தக கௌ்திபபெனறனர் சிலர். அன்றிரவெல்லாம் பலர் அடிகளாருடன இருந்தனர். மறுநாள் தேய்பிறைச் சஷ்டியும் அவிட்டமும் கூடிய (30-5-1929) வியாழன் காலை 7-15 மணிக்கு யாவரும் காணுமாறு சுவாமிகள் தமது பிராண வாயுவை உள்ளுக்கிழுத்து, பனனிருகைப் பரமனுர் பத நிழல் அடைந்தனர். அன்றெல்லாம் ஆராதனைகள் நிகழ்ந்தன. மறுநாள் (31-5-29) வெள்ளியன்று அவரது திருமேனி மிக்க சிறப்புடனும் தமிழ்மறை முழக்குடனும் அழகிய புஷ்ப விமானத்தில், திருவானமியூர் மயூரபுரத்திலமைக்கபபட்ட சமாதி நிலயத்திற்குக் கொண்டு வந்து சோககப்பட்டது. இனறும் அடிகளார் விரும்பியவாறே அவரது சமாதியினமேல் மயூரநாதன் திருவுரு ஒளிர்கின்றது. மயூரவாகனன் மலரடி தலைக்கொண்ட மகான் பாம்பன் அடிகள் அங்கு எழுந்தருளியிருந்து, வழிபடும் அன்பர்கள் மகிழ வரம்பல தந்துகொணடுள்ளார்.

வாழ்க பாம்பனுர் மயிலவனசேவடி நீழலில்

குறிப்பு :—நமது பாம்பனடிகளார் குருபூசை விழாவும் நாளது பிலவஞு வைகாசிமீ 22உ (4-6-61) ஞாயிற்றுக் கிழமையனறு திருவான்மியூரில் நடைபெறவுளது. அன்பர்கள் தவருது தரிசித்துப பேறு பெறுக. சுவாமிகள குருபூசை வருவதால், நாம் அடிகளாரது வரலாற்றை இதோடு முடித்துக் கொணடு, அடுத்த இதழில் அவர்களது நூலகள சிலவற்றின் விளக்கம் காணபோம்.

---

கல்லாக் கலைபலவாம் ; கற்றதுதான எம்மட்டு ?
வல்லார் பலருளரால், வையகத்தில் எண்ணுதியே.

# வைதிகத்திருவும் மன்னவர் திருவும்

(கி. வா. ஜ.)

நடு நாட்டில் திருமுனைப்பாடி நாடு என்பது ஒரு பகுதி. அந்த நாட்டில் திரு நாவலூர் என்னும் ஊரில் மாதொரு பாகனுர்க்கு வழிவழி அடிமை செய்யும் ஆதிசைவர் குலத்தில தோன்றிச் சிறப்புப் பெற்றுர் சடையனுர் என்னும் பெரியார். அவருடைய மனைவியார் இசை ஞானியார். இருவருக்கும் குழந்தையாகத் திருவவதாரம் செயதார் ஆலால சுந்தரா. அவருக்கு ஆரூரன் எனறு திருநாமம் இட்டு அனபுடன வளர்தது வந்தனர்.

குழந்தை இனிது வளர்ந்து வந்தது. திருக்கோவலூரில் இருநது திருமுனைப்பாடி நாட்டை ஆண்டுவந்த நரசிங்க முனையரையர் என்னும் மன்னர், அடிக்கடி திருநாவலூர் வந்து இறைவனைத் தரிசித்துக்கொண்டு செல்வார். ஆரூரர் பிள்ளைப் பிராய விளையாடல்களைப் பயின்று வந்தார். சிற்றில சிதைத்தும் சிறு தேருருட்டியும் விளையாடினுர். ஒருநாள் தரிசனத்துக்கு வந்திருநத நரசிஙக முனையரையர் இந்தக குழந்தையைக் கணடார். அழகும் ஒளியும் மிக்க அந்தத் திருவுருவம் அவர் கண்ணையும் கருத்தையும் ஈர்தததது. அதுமுதல அம்மன்னர் நாவலூர் வரும்போதெலலாம் ஆரூரரைக் கண்டு எடுத்துத தழுவி முத்தமிட்டுச் சீராட்டி இனபுறலானுர். ஆரூரருக்கும் நரசிங்க முனையரையருக்கு மிடையே அன்பு முதிர்ந்து வந்தது. மன்னருக்கு ஆரூரரைத் தம்முடனே இருக்கச்செயது பேணி வளர்ததுவர வேண்டுமெனற ஆர்வம் உண்டாயிற்று. தம்முடைய கருத்தை மெல்லச சடையனுருக்கும் இசை ஞானியாருககும் தெரிவித்தார். மன்னருடைய பேரார்வத்தைக் கண்டு

---

விளுப்பிறந்த பின்னர் விடைபிறககும்; நெஞ்சக்
கனுப்பிறந்த பினனர் செயல்கள் கலக்குமரோ.

அவர்கள் உடன்பட்டனர். உடனே நரசிங்க முனையுரையர், அவரைத் தம் பிள்ளையாக ஏற்று அரசிளங்குமரனைப் போலவே வளர்த்து வந்தார்.

அந்தணருக்கேற்ற பண்பும் அரசருக்கேற்ற செல்வத் திருக்கோலமும் பெற்று ஆரூரர் நாளொரு மேனியும் பொழு தொருவண்ணமுமாக வளர்ந்தார். உரிய காலத்தில் அவருக்கு உபநயனம் செய்து கலைகளைக் கற்பிக்கலானார் மன்னர். அரச ருக்கு ஏற்ற ஆனையேற்றம் குதிரை யேற்றங்களைப் பழகினார் ஆலால சுந்தரர். ஆதி சைவருக்கு ஏற்ப மறையும் ஆகமமும் பிறகலைகளும் பயின்றார். அறிவிலே மிக்கு விளங்கித் தம்மைப் பெற்றோருக்கும் வளர்த்தவருக்கும் வியப்பையும் பெருமிதத் தையும் மகிழ்ச்சியையும் அளித்தார்.

அவருக்குத் திருமணம் செய்வதற்குரிய பருவம் வந்தது. சிறந்த குலப் பெண் ஒருத்தியைத் தேர்ந்து மணம்புரிய வேண்டும் என்று சடையனார் முயன்றார். அருகே உள்ள புத்தூர் என்ற ஊரில் சடங்கவி சிவாசாரியர் என்ற ஆதி சைவ ருடைய திருமகளைத் தேர்ந்து, அவளை சுந்தரருக்குரிய இல்லக் கிழத்தியாக ஏற்றுக்கொள்ள முடிவு செய்தார்.

நரசிங்க முனையரையர் இதனை அறிந்து மகிழ்ந்து, அரசர் திருவுக்கு ஏற்ற வகையில திருமணத்தை நடத்தவேண்டு மெனறு எண்ணி அதற்கு ஆவன புரிந்தார். முகூர்த்த நாளைக் குறித்துத் திருமண ஓலையும் போக்கினார்கள்.

இந்தத் திருமணத்தைக் கண்டு களிப்பதற்காகப் பல ஊர்களிலிருந்து மக்கள் திரண்டு வந்தனர். ஆடவரும் பெண் டிரும் வந்து மொய்த்தனர். (தொடரும்.)

---

காக்கையைச் சோற்றிற்குக் காவலா வைப்பதுபோல,
ஆக்குபொருள் காப்பரென, அக்ரமரை நம்புவதோ?

உ

திருச்செங்கோடு

# திருப்புகழ் விரிவுரை

(குகஶ்ரீ.)

பத்தர்க ணப்ரிய நிர்த்தந டித்திடு
    பக்ஷிந டத்திய குகப்பூர்வ
பச்சிம தக்ஷிண வுத்தர திக்குள
    பத்தர்க ளற்புத மெனவோதும்
சித்ரக வித்துவ சத்தமி குத்ததி
    ருப்புக ழைச்சிறி தடியேனும்
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
    சித்தவ நுக்ரக மறவேனே;
கத்திய தத்தைக ளைத்துவி ழத்திரி
    கற்கவ ணிட்டெறி தினைகாவல்
கற்றகு றத்திநி றத்தக முத்தடி
    கட்டிய ணைத்தப விருதோளா!
சத்தியை யொக்கவி டத்தினில் வைத்தத
    கப்பனு மெச்சிட மறைநூலின்
தத்துவ தற்பர முற்றுமு ணர்த்திய
    சர்ப்பகி ரிச்சுரர் பெருமானே!

(பதவுரை.) (கத்திய தத்தைகள்......தோளா!)

கத்திய தத்தை களைத்து விழ - கத்திப் பேசும் கிளிகள் களைப்படைந்து விழும்படி;

---

அறுகுடலைக் கட்டி அணைப்பார்போல், பல்லோர்
உறுபொருளால் நல்லறத்தைச் செய்யா தொழிவாரே.

**திரி கவுண் கல் இட்டு எறி தினை காவல் கற்ற** - சுழற்றுகிற கவணில் கல் வைத்து அடித்துத் தினைப் புனத்தைக் காக்கக் கற்றிருந்த ;

**குறத்தி திறத்த கழுத்து அடி கட்டி அணைத்த பன்னிரு தோளா** - குறவர் குல வள்ளியாரின் ஒளிமயமான கழுத்தின் அடிப் பாகததைக் கட்டித் தழுவிய (உயர்ந்த) பனனிரு தோள்களை யுடையவனே !

(சத்தியை......பெருமாளே !)

**சத்தியை ஒக்க இடத்தினில் வைத்த தகப்பனும் மெச்சிட** - (அருள்) சக்தியான அமலையைத் தமக்குச்) சமமாக இடப் பாகத்தில் அமர வைத்த (சிறநத) தந்தையாம் சிவபெருமானும் (பலபடப்) புகழ்ந்து பாராட்டும் படியாக ;

**மறை நூலின் தத்துவ தற்பர முற்றும் உணர்த்திய** (பெருமாளே !) - வேத (ஆகம) நூற்களின் உள்பொருள் நுட்பம், தன் சொரூபம் (முதலியவைகளை) முழுதும் உணர்த்திய பெரிய பொருள் ஆனவனே!

**சர்பப கிரிச்சுரர் பெருமாளே** - நாக மலை (எனும் திருச்செங்கோட்டுப் பதியில்) பிரியம் கொணடுள்ள பெரியரிற் சிறந்த பெரியோனே ! ;

(பதத.. ......குகா !)

**பக்தர் கண பரிய** - (வீர வாகு முதலிய) அன்பர்கள் கூட்டத்தில் ஆர்வம் கொண்டவனே !;

**நிர்த்தம் நடித்திடு பக்ஷி நடததிய குக** - (பர) நிருததம் (அபர) நடனம் இரண்டும் செய்து கொண்டே இருக்கின்ற (தாரக) மயிலை (ஊர்தியாககிச) செலுததுகினற (இதய) குகா !;

(பூர்வ.,........திருப்புகழை.)

---

தன்குடி வாழத் தருமரொரு பொய்சொன்னர்
இன்றும் அவப்பெயரை எய்தியதை எண்ணேமோ?

பூர்வ பச்சிம தக்ஷிண உத்தர திக்குள பத்தர்கள் அற்புதம் என ஓதும் - கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு (எனும் நான்கு) திசைகளில் உள்ள அன்பர்கள், அற்புதம் என்று (குதூகலித்துக) கூறுகினற ;

சிதர கவித்துவ சத்தம் மிகுத்த திருப்புகழை - அழகிய கவித்துவம் அமைந்து, சநதங்கள் மிகுத்த (சால்புடைய) திருப்புகழ்களை ;

(சிறிது அடியேனும்.........மறவேனே !)

சிறிது அடியேனும் செப்பு என வைத்து - ஒரு சிறிது பாடும்படி அடியேனையும் பணித்து ;

உலகில் பரவ தெரிசிதத அநுக்ரகம் மறவேனே - (அவைகள்) உலகத்தில் வியாபகம் ஆம்படி வெளிபபடுத்திய (மாபெரும்) அருளை, (அடியேன்) மறக்கவே மாட்டேன், (எ-று).

குறிப்பு—(அடியேனும் - அடியேனையும் ; இரண்டனுருபு தொக்கது. தெரிசித்த-கடாட்சித்த.)

விரிவுரை.

'பெரும்பைம் புனத்தினில் சிற்றேனல் காக்கின்ற பேதை' என்று, வள்ளியார்க்கு ஒரு பெயர் உண்டு. புனம் என்பது - உலகம், சிற்றேனல் - சிறுதினை ; இது உயிர்த் தொகுதிகளை உணர்த்தியது.

அச்சிறுமை உயிர்கட்குச் சேமம் செய்து, பயனும் எழுந்த பக்குவம் பலித்த பின, அவைகளை நிமலன அடிநிழலில் நிவேதிகக்த் திருவுளம் கொண்ட நிமலை, எளிய குறவர் குடியில் வந்து இருந்தார்.

காம, குரோத, உலோப, மோக, மத, மாற்சர்யம் ஆறும், மைனு, புறு, மயில், கிளி, குயில் சேவல்களின் உருவம் கொண்டு, ஆன்மாககளாம் தினைகளை விழுங்க ஆரம்பிததன.

---

குரங்கின்கைக் கொள்ளி கொடுப்பதுபோல, தீயர் கரங்கொள்ள நன்னூலைக் காட்டுவதும் ஆகாதே.

அதை அறிந்தார். உடனே எழுந்தார். 'ஆலோலம்' என்று குரல் கொடுத்து அவைகளை எச்சரித்தார்.

(ஆல+உலம்=ஆலோலம்; "அஆ முன் உஊ வரின் ஓஓ ஆகும்" என்பது விதி. ஆல - அசை, உலம் - கல்.)

அடிப்பேன்! அகன்று விடுங்கள்! என்ற ஆலோலப் பொருளை யறிந்த பறவைகள் பல, கல்லடிக்குப் பயந்து பறந்தன.

அநுட்டானத்தில் தூரம் ஆன சிலர், அனுபூதிமான் களின் திருவாய் மொழிகளை, தம் அனுபவம் போல கூறி ஆரவாரிப்பர். சீரழிந்தார் மொழிகள் செவியில் புகுமேல், பயனும் இல்லை, பாவமும் ஆகும் என்பதை, ஆன்மாக்கட்கு அன்றே அறிவித்தார் வள்ளியார். அதை, ஒரு சம்பவததால் அறிகிறோம்.

கல்லடிக்கு அஞ்சிய பல பறவைகள், ஓடி எஙகோ ஒளிந் தன. சொன்னதைச் சொலலும் கிளிப்பிள்ளை எனபர்; அவை கள் மட்டும், அவரது ஆலோல மொழிகளை உருப்போட்டு, அத்தொண்டையி லிருந்து எதிர் குரல் எழுபபி இரைச்ச லிட்டன. அதைக் கேட்ட வளளியார்க்கு, ஆத்திரம் பிறந்தது.

கவண் என்பது, பறவைகளை ஓட்டும் ஒரு கருவி. அதை எடுத்தார். வன்கல்லை யதில் வைததார்.

'சொற்கிளிகாள் ஆலோலம்' என்று, தானும் அடித் தொண்டையி லிருந்து குரல் கொடுத்து, விறுவிறுதது ஓடுமாறு அவைகளை விரட்டினார். ஆரவார வேகத்தை அடக்கி, இபபடி உயிர்களாம் பயிர்களைப பாதுகாக்க வள்ளியார் பயினறுளர். இந்த அருமையறிநது,

'காக்கக் கடவிய நீ காவா(து) இருந்தக்கால் ஆர்க்குப் பாரம்'

என்று, ஆன்மாக்கள் அத்தேவியை ஆராதிப்பது இயற்கை.

---

குரஙகுள அழகுமுகம் இலலை, குணமெய்த்
தரங்கொளளல், நீசர்க்குத் தாமில்லை, ஆய்வாயே,

*ஆமல முருகா! கத்தும் கிளிகளை விரட்ட, அடித் தொண்* டையால் அரற்றும் கானவர் மகளின் அடிக் கழுத்தை, தாவிப் பன்னிரு தோள்களாலும் தழுவுகின்றீர்; காப்பாளர் விஷயத்தில், அவ்வளவு உவகை காட்டும் உம்மை,

'கட்டி அணைத்த பன்னிரு தோளா!' என்று, பாடி மகிழ்ந்து பரவுகிறோம்.

இதே செய்தி, சிவ சந்நிதியிலும் இருக்கிறது. பேரருள், உமாதேவி என்னும் பெயரைக் கொண்டது. சத்தான சிவனார், சித்தான அத்தேவியை, தம்முள் சமமாகச் சிறக்க, என்றும் தம் இடப்புறத்தில் எழுந்தருள வைத்தார். அதை,

'சத்தியை ஒக்க இடத்தினில் வைத்த தகப்பன்

என்று ஓதும் போதே உவகை உதிக்கிறதே!

நீறு பூத்த நெருப்பைப்போல, அருள நூலான வேத ஆகமங்களில், மாபெரும் நுட்பங்கள் பல மறைந்திருக்கின்றன. அவைகளுள, தத்துவம் தற்பரம் முக்கியமானவை.

தத்துவம் - உள்பொருள் நுட்பம், பொருள் பிரபஞ்சப் பொலிவு நிலை. தற்பரம் - எதனிலும் தூனேயான தனி நிலை.

"மன வாக்குச செயலாலே அடைதற்கு அரிதாய், ஒன்று போலே இருக்கும் பொருளை எவ்வாறு புகல்வதுவே!"

என்று, அதனை அறிவிக்க இயலாது பலர் அயர்ந்தனர்.

அகத்தியர், சண்முனிவர், நாரதர் முதலினோர் உணருமாறு அந்நுட்பத்தை உணர்த்திய உம்மை,

'தத்துவ தற்பர முற்றும் உணர்த்திய பெருமானே!'

என்று போற்றி ஏததிப் புகழ்கிறோம்.

ஆணவ மல காரணன் முயலகன். அவனை அடிக்கீழ் சிவபிரான் அழுத்தினார். பாழும் அம்மலம் பாம்புருவும் கொள்

---

ஈயார் பொருள், குருடர் கைபபொருள்போல்; என்றும் தோயார்கள் நல்லறத்தைத், தோற்றுவிப்பர் தீவினையே.

ளும், அவ்வமயம், அதனை அடிக்கீழ் அடக்குகிறது உமது பிரணவ மயில்; இதனால், 'நாக பந்த மயூரன்' என்றும் உமக்கு ஒரு பெயர் உளது. அப்பாம்பு போன்ற வடிவுடையது சர்ப்பகிரி. அதன்மேல் வீற்றிருக்கும் நின் விமல அழகே அழகு!

"செங்கோடனைச சென்றுகண்டு தொழ,
நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே"!

என்று உணரும்போ தெல்லாம் எம் உள்ளம் உருகுகின்றதே!

'சர்ப்பகிரிச் சுரர் பெருமாளே!'

என்று கூறிப் பேருன சாந்தி பெறுகிறோம்.

வீரவாகு முதலிய நவ வீரர்கள், விளக்கமான இலட்சம் வீரர்கள் முதலிய அன்பர் கணங்களில் ஆர்வம் பெரிதும் உடையவர் நீர்.

'எம் விஷயத்தில் மாபெரும் அபராதம் செய்தாரை மன்னிப்பம்; எமது பக்தர்களுக்குப் பாதகம் செய்தாரை மன்னிககவே மாட்டோம்' எனறு கந்தபுராணத்தில் அருளிய உம்மை,

'பக்தர் கணப்ரிய!' என்று கூறிப் பணிகின்றோம்.

பாவனையில், சிவஞான சமிக்ஞை காட்டும் பரநிருத்தம்; கலையறிவு எனும் அபர வித்தையை அறிவிக்கும் அபர நடனம். இந்த இரண்டையும் நினைவுறுத்த, ஆவரண சக்தி நிருத்தம் இடும்; நடித்து இடும். மற்று, பத்தர் கணங்கள் பிரியப் படும் நிர்த்தம் நடித்திடு பக்ஷி' என்று எண்ணுவதும் ஒரு வகை.

தாமசம், இராஜசம், சாத்விகம் எனும் மாபெரும் முக்குண மயமே பிரகிருதி மாயை. அதற்குக் காரணமாயுளது அசுத்த

---

செல்வர்க்கு நல்விருந்து செய்கின்ற ஏழைகள்தாம்,
ஒல்லும் குரி,கரிக்(கு) ஊட்டுவது போலுமரோ.
(குரி-குருவி, கரி-யானை.)

மாயை; இந்த இரண்டும் என்னையின்றி இல்லை என்கிறது சுத்தமாயை. எம்பெரும ! இந்த சுத்தமாயையே நீர் ஏறிவரும் இன்ப மயில்.

இந்த ஏறுமயில் 'ஏறிவரும் அதிரகஸ்ய' தெய்வமான உம்மை, 'பக்ஷி நடத்திடு குக !' என்று பாடுவார்க்கு வீடு பேறு கூடுமே.

குகன் - அணுவிலும் அணுவாய்ப் பெரியதினும் பெரிய தான பரமான்மா; அது, ஆன்ம இதய குகையில் அமர்ந்துள்ளது என்லை எண்ணும் போதே இன்பக் கண்ணீர் வருகிறதே !

பூர்வம் - கிழக்கு ; பச்சிமம் - மேற்கு ; தக்ஷிணம் - தெற்கு ; உத்தரம் - வடக்கு ; இவைகள் முழுதும் வட சொற்கள்.

எந்தத் திசையிலும் அனபர்கள், ஏராளமாக இருக்கின்றனர். அவர்கள் யாவரும், அடியேன் பாடும் பாடல்கள் அற்புதம் அற்புதம் என்று அதிசயிக்கின்றனரே !

அழகிய கவிதா சாதுர்யம் ; அதில் எழுத்துக்கள், பதங்கள், கலைகள் முதலியன, கொஞ்சும் சந்தங்களுடன் குதித்து வரும்; அந்த அருட்புகழைத திருபபுகழ்ப் பெயர் வைத்துப் பாடுமாறு, அடியேனையும் பொருளாககிப் பணித்தருளினீர் !

பணித்த அருள துணையால் பாடினேன ; அதுவும் ஒரு சிறு அளவுதான. உமது வியாபக முழுமை விலாசத்தை, விரிவாக ஓத எம்மால் இயலுமதோ தேவே !

பாடிய திருபபுகழ், உலகம் முழுதும் பரவுமாறும் அருள் நோக்கும் பாலிததீர் !

இநத அருமையை இடைபறுது எண்ணுகிறது எம்மனம்.

---

முழுத்த குலஅறிவு, கல்லாமுன் நிற்கும்;
பழுத்தார்தம் சச்சரவைப் பாலகரும் தீர்ப்பாரே.

'யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனுல்,
பூமேல் மயல் போய், அறம், மெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே'

என்று, கந்தர் அநுபூதியிலும் அடியேன் இக் கருத்தை அறிவித்துளன். கல்வியெலாம் உளளிருந்து கற்பித்தான்; அமைதி அறிவு அமைய வைத்தான. உலக மயலே ஒழி! சிவதருமம் செய்! கற்றகல்விகொண்டு மாநுடத்தைப் பாடாதே! எம்மேல் பாடு! தந்த அறிவைத திருப்பித் தந்துவிடு! அதற்கு யாதுவழி தெரியுமா? நாவின் மேல் எமது திருபபுகழ்மட்டும் நடமிடச் செய்! இனி உன உத்யோகம் இதுதான என்று,

'திருப்புகழைச் சிறிதடியேனும்
செப்பு என வைத்து, உலகிற் பரவத்
தெரிசித்த அநுக்ரகம் மறவேனே!

என்று மகிழ்ந்து பாடுகிருர் அருணை மாதவர்.

மொழிப்போர், அரசியல் ஆதிய அக்கப் போர்களை அடியொடு மறந்து, பழைய முனிவர்களைப் பின்பற்றி பரம தெய்வத்தைப் பரவி யிருந்தால், நம் மனநிலைக்குத் தக்கபடி நம்பன் நம்மை நடத்துவன். வாழ்வாங்கு வாழ அதுதான் வழி!

வாழ்க திருப்புகழ் வளம்!

ஓம்.

---

கொள்ளையடிப் பார்பொருளை; இழந்தாரைக் கும்பிட்டு,
அள்ளிக்கா. ணிக்கையென(று) அளிப்பாரும் உள்ளனரே.

# அயில்வேல் அரசன்

[கி. வா. ஜகந்நாதன்]

மிடி என்ற பாவி, ஒருவனுடைய வாழ்க்கையில் வெளிப் பட்டால் அவனிடம் என்ன பண்பு இருந்தாலும் ஓடி விடும் என்பதை அருணகிரிநாதர் கூறினர். முதலில் வடிவு குடி போகும் என்றார். பிறகே தனம், மனம், குணம், குடி, குலம் ஆகியவை போகும் என்றார்.

மானம் உள்ளவர்கள் வறுமை வந்தாலும் செம்மையாக வாழ்வார்கள். தமக்கு வறுமை இருப்பதை வெளிக்காட்டார்கள். பொன் வைக்கிற இடத்தில் பூவை வைத்துத் தம் கடமையை ஆற்றுவார்கள். தம்முடன் இருப்பவர்களுடைய நலத்தைக் கவனித்துத் தம் நலத்தைப் புறக்கணிப்பார்கள். இதனால் அவர்களுடைய மேனியின் வளப்பம் குறையும்; மெலியும். இது மற்றவர்கள் காணும்படி உண்டாவது ஆதலின் அதை முதலில் சொன்னார்.

சிறந்த வேளாண் குடியிலே பிறந்தவர் ஒருவர், இருப பதை வைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார். சிறிதளவு நிலத்தை உழுது பயிரிட்டு அதில் வரும் விளைவைக் கொண்டு செட்டாகக் குடித்தனம் செய்தார். அவரிடம் மிடிவந்து புகுந்தது. வறுமை கையும் காலும் கொண்டு திருடனைப் போலவா புகும்? அவருக்குக் குழந்தைகள் அதிகமாயினர். நிலத்திலிருந்து கிடைத்த வருமானம் போதவில்லை. பிறரிடம் போய்க் கேட்க அஞ்சினார். இருப்பதைக் கொண்டு ஒருவாறு வாழத்தான் வேண்டும் என்பதை உணர்ந்து தம் வயிற்றையும் வாயையும் கட்டினர். குழந்தைகளுக்கு வேண்டிய உணவும்

---

தோண்டியமண், தோண்டுகுழி, மூடிமிஞ்சித் தோன்றல்போல, ஈண்டுவினை, வேதனையை மேலெழுப்பும் கண்டாயே.

உடைகளும் குறைவின்றிக் கிடைக்கும்படி செய்தார்; தாம் மட்டும் சில நாட்கள் ஒருவேளையே உண்டார். உறவினர் வீட்டில் உண்ணுவதாகச் சாக்குப் போக்குச் சொன்னார். அவர் உடம்பு மெலிந்து வந்தது. அவருடைய வடிவு குறைந்தது.

இந்த நிலையில் அவருக்கு மற்றொரு குழந்தை பிறந்தது. 'இவர் வறியவர்; இவர் வீட்டிலே பிறக்கக் கூடாது' என்று அந்தக் குழந்தைக்குத் தெரியுமா? போதிய உணவு வளம் இன்மையால் அவருடைய மனைவிக்கு நோய் உண்டாயிற்று. மருத்துவம் செய்யப் பணம் வேண்டும். அவரிடம் கொஞ்சம் பணம் இருந்தது. சமயத்துக்கு உதவட்டும் என்று வைத்திருந்தார். அதைக் கொண்டு மருத்துவம் செய்துவிடலாம். ஆனால் அடுத்தபடி ஏதேனும் செலவு வந்தால் அப்போது என்ன செய்வது?

அவருடைய போதாத காலத்துக்கு ஒரு தோழன் கிடைத்தான். அவன் சூதாடி. அவனுடைய பழக்கத்தால் இந்த வேளாளருக்குச் சூதின்மேல் நாட்டம் சென்றது. எளிதில் பெருந்தொகையைப் பெறும் வாய்ப்பு அதில் இருக்கிறது என்று எண்ணினர். சூதைப் பழகிக் கொண்டார். தம்மிடம் உள்ள சிறிதளவு தனத்தைப் பெரியதாக்கிக் கொள்ள ஏற்ற வழி கிடைத்து விட்டதாக மனப்பால் குடித்தார். வேறு எந்த வழியும் இல்லாதபோது அந்த வழியே சரியானது என்று அவரிடம் புகுந்திருந்த மிடி உரைத்தது. இரண்டு மூன்று முறை சூதாடித் தம்மிடம் இருந்த சிறிதளவு தனத்தையும் இழந்தார். உடம்பு நைந்து போனதோடு கையிலிருந்த பணத்தையும் பறிகொடுத்து உள்ளமும் நைந்து போனார். அவரிடமிருந்த வடிவும் தனமும் குடி போய்விட்டன.

---

ஊட்டறுத்துச் சூரியன்முன் ஊர்ந்தாலும், பேரறிஞர்
கூட்டத்தை யூட்டறுத்துப் பேரவதுவே கூடாதே.

அவர் மனைவி நோய்வாய்ப்பட்டு வாடுகிருள். புதிதாகப் பிறந்த குழந்தை என்பும் தோலுமாகக் கிடக்கிறது. போதிய அளவுக்கு விளைசசலும் இல்லை. என்ன செய்வது? அந்தக் குழந்தை இருப்பதனால் எனன பயன்? என்ற எண்ணம் தோன்றியது. அவருடைய கெட்ட எண்ணப்படி அந்தக் குழந்தை மிடிக்குப் பலியாயிற்று. தாய் இரங்கி இரங்கி அழுதாள். அவர் மனம் கல்லாகி விட்டது. பிறரைக் கண்டு பரிந்து உருகும் இயல்புடையவராக இருந்தவர்தாம். ஆனால் இப்போதோ அவரிடம் அந்தப் பழைய மனம் இல்லை. தம் மனைவியைக் கடிந்து கொண்டார். "இருக்கிற குழந்தை களுக்கே சோற்றைக் காணேம்; புதிதாய் வந்தது போயிற் றென்று புலம்புகிருயே!" என்று கத்தினர்.

அவரிடம் இருந்த நல்ல மனமும் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டது.

நாளாக நாளாக அவர் எபபோதும் எரிநது விழத் தொடங்கினர். பொல்லாதவர்களுடைய பழககம் ஏற்பட்டது. தகவில்லாதவர்களோடு சேர்ந்து தீய பழக்கங்களைக் கற்றுக் கொண்டார். உயிர் போனலும் பிறரிடம் கைநீட்டத் துணி யாத குடியிற் பிறந்தவர் இப்போது அயலூர் சென்று இரக்கத் துணிந்தார். அவர் குடிப்பெருமை நாசமாயிற்று. இரந்து கிடைத்ததைக் கொண்டு தம் வயிற்றை நிரபபிக் கொண்டார். இருந்த சிறு நிலததையும் விற்றுச் செலவழித தார் வீட்டுக்கு வாரத்துக்கு ஒருமுறை வரத் தலைப்பட்டார். தம் துனபத்தை மறப்பதற்காகக் குடிக்கப் பயின்றார். தொடாந்து தீய ஒழுக்கங்கள் அவரிடம் குடி புகுந்தன. குல ஒழுக்கம் அடியோடு அழிந்தது.

அந்த வறியவர் இபபோது இபபடி இருக்கிறர்! அழகாக இருந்தவர் வடிவு மாறிவிட்டார். சிறிது பணம் கையில்

---

தோண்டு குளம்தேடித் துழாவும் தவளையென,
ஈண்டுபொருள் செல்வர்களை, ஏழைகள்தாம எய்துவரே.

வைத்திருந்தவர் சூதில் அதைத் தோற்றுவிட்டார். இரக்க மும் அன்பும் உள்ள மனத்தினராக இருந்தவர் இப்போது மனம் மாறி விட்டார். அவருடைய நற்குணங்கள் ஒழிந்தன. குடிப் பெருமையைக் காற்றிற் பறக்க விட்டார். இறுதியில் குல ஒழுக்கத்தைத் துறந்தார். பிறகு அவர் உயிருடன் இருந்தால் என்ன? இல்லாவிட்டால்தான் என்ன?

அவரிட மிருந்து ஒவ்வொன்ருகக் குடிபோனதைச் சொல்பவர் போல அருணகிரியார் பாடுகிருர்.

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோ கியவா!

* * * * * * * * *

வறுமையின் கொடுமையைக் கண்டு வருந்திய அருண கிரியார், "வறுமை தீரவேண்டும்" என்ற விண்ணப்பத்தை யாரிடம் செய்துகொள்வார்? ஒரு நாட்டில் வறுமை இருந் தால் அதைப் போக்கி நலம் செய்வது அரசன் கடமை.

ஒரு நாட்டில ஒரு காலத்தில் சிலருக்கு வறுமை இருந் தால், அங்கே அப்போது உள்ள அரசர் ஆவன செய்து அதைப் போக்க முற்படுவார்.

அருணகிரியார் யாருக்குமே வறுமை வரக்கூடாது என்று விரும்பும் பெருங்கருணையாளர். எந்தக் காலத்திலும் இவ்வுலகில வறுமை தலைகாட்டக் கூடாது என்று ஆசைப் படுகிறவர். அந்தநிலை வரவேண்டுமானல், ஒரு காலத்தில் ஏதோ ஒரு நாட்டுக்குமட்டும் அரசனுக இருப்பவனைப் பார்த் துச் சொன்ஞல் போதுமா? அப்படிச் சொன்னுலும் அவன் கேட்பான் என்பது என்ன உறுதி?

ஆகையால் எல்லாக் காலத்துக்கும் எல்லா நாட்டுக்கும் அரசனுக இருந்து, தன அருளாணையின வழி உலகை நடத்தும்

---

கள்ளமனத் தாரழியக் கற்றவர்கள் எண்ணலிலர்;
குள்ளகரி சாபக் கொடுங்கணைதான் வேண்டுமதோ.

பேரரசனைப் பார்த்து விண்ணப்பம் செய்கிறார். கையில் கோலுடைய அரசரைப் பார்த்துச் சொல்லாமல், வேலுடைய அரசனைப் பார்த்துச் சொல்கிறார். குறிப்பிட்ட ஓர் ஆண்டில தோனறி, ஏதோ ஓர் ஆண்டில் முடிகவித்துக் கொண்டு, பினபு ஒருநாள் இறந்து போகும் அரசரிடம் சொல்லவில்லை. எல்லாக் காலத்தும் இருபபவனாக, இப்போது தோனறினான் என்று சொல்ல இயலாதவனாக, ஆதி இல்லாதவனாக, அப் படியே அந்தமும் இல்லாதவனாக இருக்கும் அயிலவேல் அரச னாகிய முருகனை நோக்கி, "எம் பெருமானே! இந்த உலகில் மிடி என்ற ஒருபாவி செய்கிற காரியம் எவ்வளவு கொடுமை!" என்று ஏக்கத்துடன் விணணப்பித்துக கொள்கிறார்.

அடி அந்தம் இலா அயில்வேல் அரசே! என்று முருகனை விளிக்கிறார். அடி - முதல; அந்தம் - முடிவு. முதலும் முடிவும் இலலாத பேராளன, கூர்மையான ஞானவேலைக் கையில் ஏந்திய பேரரசன முருகன். அவன் திருவுள்ளம் வைத்தால் மிடி என்ற பாவி மறைவான்.

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோ கியவா!
அடிஅந் தமிலா அயில்வேல் அரசே!
மிடிஎன் றொருபா விவெளிப் படினே.

[ஆதியும் அந்தமும் இல்லாத கூர்மையான வேலை ஏந்திய அரசனாகிய முருகப் பெருமானே! மிடி எனற ஒரு பாவி ஒருவனுடைய வாழ்வில் வெளிப்பட்டால் அவனுடைய மேனி யழகும், பொருளும், நல்ல மனமும், நல்ல பண்பும், குடிப் பெருமையும், குல ஒழுக்கமும் அவன்பால் நில்லாமல் அடியோடு ஒழிந்துபோவது எனன பரிதாபம்!.]

---

தளராத் தகுதியராம் தக்காரைப் பினமறத்தல்,
பின்னைவினை யாட்டென்று பேசுகின்றார் நல்லோரே.

# அபேத அனுபவம்

(அன்பன்)

வடநாட்டில், புண்டரிபுரம் என்பது ஒரு பழம்பதி. பரம பக்தர் ஒருவர் அப்பதியில் இருந்தார். அவர் விஸ்வகர்ம குலத்தவர். நித்தலும் நீராடி நித்தனை வழிபடுவது அவர் நியதி. குறை ஒன்றும் இல்லாமல் குலத்தொழிலைச் செய்வார். ஓய்வுள நேரம் எல்லாம் ஐந்தெழுத்தை ஓதுவார்.

பிறவி வெம்மை தணியாதா! பெருகிய அன்பு பிறவாதா! பேரருள் வெள்ளம் பெருகாதா! முந்தும் அதனில் மூழ்கேனோ!

இப்படியே நாள்தோறும் எண்ணுவார். இடையிடை கண் மழை சிந்துவார்.

பண்டரிபுரத்திற்கு, மென்மேலும் விஷ்ணுபக்தர்கள் வந்து கொண்டே இருப்பர்.

ஹரி பரந்தாமா! தாமோதரா!
அடியனை ஆண்டிட வா வா வா !!

என்று, ஆடிப்பாடி அவர்கள் அகமகிழ்வர். அந்த ஓசை, நரஹரிக்குச் செவியில் நாராசம் காய்ச்சி விட்டதுபோல் இருக்கும்.

பல துன்பம் அனுபவிக்க, ஆன்மாக்களைப் பாழும் பிரமன் படைக்கின்றான். பாவையரைக் கண்டதும் பல்லிளிக்கும்படி மயலை விளைவிக்கின்றான் மனமதன. பேதைகளான இப் பிள்ளைகளை நாராயணன் பெற்றெடுத்தான. அவ்வளவுதானா!

மீனாய் ஒருகாலத்தில் மின்னினான். ஆமையாகி ஒரு சமயம் உலகை அதிர வைத்தான். பன்றியாகிப படபடத்

---

கல்லூழில லாதார்க்கு நற்செல்வம் கைகூடா ;
வல்லரசர் போல், வினைகள் வந்துவந்து மோதுமரோ.

தான். குதிரை உருவம் கொண்டு குதித்தான். அரசகுலத்தில் உதித்தும், இறுதிவரை ஏழை இராமன் என ஆனான். இடையருள் இருந்தான். வெண்ணெய் திருடினான். மத்தடி பட்டான். கோபிகைகளுடன கூத்தடித்தான். நரனும் சிங்கனுமாக நடித்தான். சீச்சீ! இவனும் ஒரு தெயவமா!

என்னைப பெற்ற புண்ணியர்கள், எனக்கு அந்த இளிச்சவாயன் பெயரை எதற்கு வைத்தார்களோ? இவவூர் விஷ்ணு பக்தர்கள் குரல், விறுவிறு எனறு செவியில வநது விழுகிறதே!

ஏன் இந்தப் பாபம் ? இது எவர் கொடுத்த சாபம் ? பவம் அழிக்கும் சிவமே! கண்கள உன்னைக் காணசசெய்! செவிகள் நின் நாமமே கேட்கசசெய்! என்று தனியிருந்து கதறுவார்.

அவ்வூரில் ஒரு வணிகர். அவர் பெரும் தனிகர். இன்ப மகப்பேறு இல்லை. அதனால இடிந்தது அவர் மனம்.

பண்டரிநாதா! பராத்பரா! அடியேற்கு ஒரு மகவை அளித்தருள்! பிள்ளை ஒன்று உன் அருளால் பிறந்ததேல், அரைஞாண் ஒன்றைச்செய்து காணிக்கையாக அளிக்கிறேன் என்று, சிறக்கப் பிரார்த்தனை செய்து கொண்டார்.

எம்மான் திருவுளம் இரங்கியது. அடுத்த ஆண்டில் பிள்ளை ஒன்று அவர்க்குப் பிறந்தது. மகிழ்ந்தது செட்டியார் மனம்.

பத்தரை மாற்றுத் தங்கததில், இரத்தினங்கள் பதிக்க வேண்டும். விசித்திர வேலைப்பாடு விளங்க வேண்டும். அத்தகைய அரைஞாண் அமைக்கும் அறிஞர் பண்டரிபுர நரஹரி என்று அறிந்தார். வந்தார். அவரை வணங்கினார். அரிய தன் கருத்தை அறிவித்தார்.

---

ஊட்டிவளர்த் திட்டாலும், ஓடிவிடுமே காடை;
நாட்டினில் காடர்களை, நாம்திருத்த லாகாதே.

ஐயா ! இவ்வூரில்தான் பிறந்தேன். எனக்கு வயது இப்போது ஐம்பது. இதுவரை புண்டரிநாதனை, ஒருநாளும் போய்ப் பார்த்தது இல்லை. பார்க்க விருப்பமும் இல்லை. நான் மறந்தும் புறந்தொழா மாநதர் பரம்பரை. சிவத்தை யன்றி, பிற தெய்வங்களைச் சிநதிப்பது இல்லை.

அம்மூர்த்தியின் இடையளவை அறிந்து வாரும் ! சிந்தை மகிழச் செய்து தருகிறேன என்றார் நரஹரி.

சிந்திததார் செட்டியார். இப்படியும் ஒரு பிரகிருதியா ! அடபாவமே ! சரி எப்படியாயினும் போகிறார். நமக்கு அது குறித்த கவலை வேண்டா. அரைஞாண் செய்தளித்தால் போதும் என்று எண்ணினார்.

தாமே சென்றார். பண்டரிநாதர் இடையளவை எடுத்தார். கொண்டு வந்தார், நரஹரியிடம் கொடுத்தார்.

குறிதத நாள்களுககுள், அவரும் அரைஞாணை அற்புதமாகச செய்து அளித்தார். மகிழ்ந்து, செட்டியார் சன்மானம் வழங்கினார்.

நல்ல ஒரு நாளில் சுவாமிக்கு அபிஷேகம் நடந்தது. அர்ச்சகர் அரைஞாணை வாஙகினார்.

என்ன அதிசயம் ! நான்கு விரல் அளவு குறைகிறது. கண் கலங்கினார் செட்டியார். ஐயோ ! அபசாரம் பண்ணினேன் எனறு அலறினார். ஓடி வந்தார்.

ஐயா ! என்னை மனனித்துக் கொள்ளுங்கள் ! எவ்வளவு கேட்டாலும் கொடுத்து விடுகிறேன். இதை நாலவிரல் அளவு கூட்டிச்செய்து கொடுங்கள் என்று கெஞ்சினார்.

இரக்கம் மிக்க நரஹரி, தேம்பும் செட்டியாரைத் தேற்றினார். அவர் கருத்துப்படியே நால்விரல் அளவு நீட்டி அளித்தார்.

---

தம்மேல் பனைசாய வெட்டும் தரித்திரர்போல்,
நம்பினரைச் சாய்ப்பார், நலமிழந்து போவாரே.

குதூகலமாகிச் செட்டியார், அரைஞாணைக் கொண்டு போய் அர்ச்சகரிடம் கொடுத்தார். அணிந்த போதுதான், இரண்டு விரல் அளவு, அது நீண்டிருப்பது தெரிந்தது. திகைத்தது மனம்.

ஒருதரத்திற்குப் பத்துதரம் பார்த்துப் பார்த்து அளவெடுத்தேனே! ஸ்ரீபாண்டு ரங்கா! வீணான பணியை உம் திருவுளம் விரும்பவில்லையா! ஐயோ! ஐயோ! என்று அலறினார். அரைஞாணை வாங்கினார். அழுதபடியே வந்தார்.

ஐயா! அபசாரம் அதிகமாம்படிப் பேதையின் தவறு பெருகுகிறதே! தாங்களே வந்து, பாண்டுரங்கனைக் கண்ணாரப் பார்த்து, தங்கள் கையாலேயே அளந்து அமைத்தால், அரைஞாண் சரியாக அமைந்துவிடும். பாதிக்கும் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்று பதறினார்.

" செட்டியாரே! கள்ளம் செய்யும் அத்தெய்வத்தைக் காண விரும்பவில்லை என் மனம். வெதும்பும் உம்மைப் பார்க்கிற போது வேதனைதான் விளைகிறது.

ஒரு சீலையால் கண்கட்டிக் கொண்டு வருகிறேன். என முன்கையைப் பிடித்தபடி, நீர் முன்னே போம் என்றார் நரஹரி.

இவர் எப்படி வந்தால் நமக்கென்ன! திருப்பணி நிறைவு பெறவேண்டும் என்று தீர்மானித்தார் செட்டியார்.

புனித பக்தர்கள் இருவரும் புறப்பட்டனர். விவரம் அறிந்த விஷ்ணு பக்தர்கள், இதுகண்டு நரஹரியை வெறுத்தனர். அதிக காய்ச்சல் கண்டவனுக்கு, அறுசுவை ருசிப்பதில்லை. அதுபோல், கமலநாபர் இவர்க்குக் கசப்பாயிருக்கிறார் என்றே, பன்னிப் பன்னிப் பலபடப் பேசினர்.

வளர்ந்த அச்சொற்களை நரஹரி செவியில் வாங்கவே இல்லை. செட்டியாருடன் சென்றார். பண்டரிநாதர் முன்

---

பொல்லார் குறைமறையும், புண்ணியர்கள் தம்தவறு
எல்லாரும் காண,மலை மேல்விளக்காம்,என்பாரே.

வின்றார். கண்கட்டுடன், கேசாதி பாதம்வரை கையால் தடவினார்.

என்ன அதிசயம்! இது இலிங்கம் போல இருக்கிறதே. பண்டரிநாதரை, நெடுமால் என்று அல்லவா நினைத்திருந்தேன்! மதியிலாதேன் இதுவரை அவமதித்து விட்டேன். மாதேவ! மன்னித்தருள்! என்று கூவியபடி, இறுக்கிய கண் கட்டை அவிழ்த்து எறிந்தார். கைகுவித்தார். திருமேனியை நோக்கினார்.

நீலமேக சியாமளர். மகர குண்டலம். கௌஸ்துபம். இடையில் ஊன்றிய இருகரம். பீதாம்பர உடை. உபய திருவடிகள். பண்டரிநாதர் திருமுகம், அவரைப் பார்த்துப் பரிகசிப்பதுபோல் தோன்றுகிறது.

ஐயோ! என்ன கூத்து இது! கனவா நனவா காண்பது நான்? எறிந்த துணியை எடுக்கத் திரும்பினார்.

எங்கே போகிறாய்? நில்! எனும் இனிய ஒருகுரல் எழுந்தது. அதனுடன் அவர் கை, பண்டரிநாதர் பிடியில் அகப்பட்டுக் கொண்டது.

பண்டரி நாதா! பலாத்காரம் செய்யாதே! உன்னைப் பார்க்கவே மாட்டேன்! பயனற்ற என் விரதம் பங்கப்பட இடம் தரேன் என்று படபடத்தார் நரஹரி.

நரஹரி! ஊன்றி எம்மை நீ இன்னும் உணரவில்லை! மருண்டவனுக்கு, இருண்ட இடமெல்லாம் பேய். நீ வழிபடும் சிவம் யாம்!

என்ன, உண்மையாகவா? சிவம்! சிவம் என்று திரும்பினார். ஆம். உமாதேவியுடன், சிறந்த கோலத்தில் சிவபிரான்.

ஐயோ! என்ன கூத்து இது என்று அலறினார். சுவாமி! என் பார்வையில் பழுதா? அல்லது இது உமது அருள் நாடகத்தில் ஒன்றா? விளங்கவில்லையே என்று விம்மினார்.

---

குற்றஞ்செய் தோமேல், குழுறுவார் நல்லோர்கள்;
பிற்றை யதுதான், பெருவே தனையாமே.

அன்பனே! கேள்! எமக்கென்று இயற்கையில் எவ்வுருவும் இல்லை. வழிபடுவார் கருத்து, எம்க்கு உருவாக வாய்க்கிறது. திருமாலாய்க் கருதுவார்க்குத் திருமாலாய் நிற்கின்றோம்; சிவமாகச் சிந்திப்பார்க்குச் சிவமாகித் திகழ்கின்றோம். இப்படியே எவ்வுருவும் என்று நினை!

ஏத்துவார் பேதமன்றி எம்மில் பேதம் இல்லைகாண்! பேத சிந்தனையால் வேதனைப் படாதே! அபேதம் எமது அருள் உருவம். புரிகிறதா என்றார் அப் புனித மூர்த்தி.

அஞ்சினார் நரஹரி. ஆஹா! இவ்வளவு காலமாக எவ்வளவோ தவறு செய்துவிட்டேன்! மட்டு[*] ரகமானது *ஆன்ம மதி. மதியின் சாயையே மதம். அறிவித்தாய்,* அறிந்தேன! தெரிவித்தாய், தெளிந்தேன், தேவ தேவா!

'ஆதி

அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனும் தானே—ஓவாதே
எவ்வுருவில் யார் ஒருவர் உள்குவார், உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான்!'

*என்ற ஆதியுலாவின் அறிவிப்பை,* இப்போதுதான் அறிந்தேன்! 'இந்த உலகத்து அறிஞர் யாதினும் மயங்கார்' என்பதை உணர்கிறேன!

வாழ்க பிரபோ! வாழ்கநின பேரருள் என்று வழுத்தினார். எடுத்துவந்த அரைஞாணை இடையில் வைத்தார். அளவு பொருததமாக அமைந்தது. அது கண்டு ஆநந்தித்தார். நரஹரி பததரின் நிமிததம், அன்று முதல், பாணலிங்கம் போல் தம் மகுடத்தை காட்டுகிறார் பண்டரி நாதர்.

வாழ்க ஆஸ்திகம். அதனில் ஒருமை கண்டு வாழ்க இந்த உலகம்!

---

வளமிருநதால் நததி மகிழகினறார் பலலோர்
தளர்கினற காலத்தில் தரங்கார்கள் நிச்சயமே.

உ
கணபதி துணை.
திருத்தணிகேசர் துணை.

# சேய்த்தொண்டர் புராண வசனம்

[முருகன அடியார் வரலாறு].
(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை)

## கணபதி

தீண்டை கலியென்ன எனநெஞ் சிடையே சதாவருசேய்த்
தொண்டர் புராணம் வசன நடையினிற் சொல்லுதற்கே
அண்டர் பதிசிவ பூஜைகளு நீர்பெற அங்கொர்வழி
கண்ட கணபதி நற்று ளிணையைக் கருதுவனே.

## திருத்தணிகேசர்

மினனயில் வேறகர வேந்து தணி
நன்னக மேய நலஙகெழு சேய
தன்னடி யார்சரி தந்தனை யான்
நன்னர் உரைகக நயந்தருள்வான்.

## சேய்த்தொண்டர்

சிறுபற்று மில்லா அடியேன் பணி சேய்கழற்கண்
மறுவற்ற பத்தி வளர்நெஞ் சொடு வாழ்த்தி நித்தம்
உறுபத்தி யோடும் உலகிற் பல தொண்டு செய்த
அறுபத் தறுவர் அடித்தாமரைக கன்பு செய்வாம்.

## புராண ஆசிரியர்

நானோ சொலவலேன் நந்தம் குறவள்ளி
மானோ டுலவும் மகானறிவான் - வானோர்சேர்
தேனூர் வரகவிச் செல்வரெம் சொக்கலிங்கர்
தேனூர் கவியின் சிறபபு.

---

தடபுட லாகத் தருமங்கள் செய்தாலும்
மடமை ஒழுக்கத்தார், மாண்புறுவ தில்லையரோ.

## தோற்றுவாய்

எனது வேண்டுகோட் கிணங்கித் தேனூர் வரகவி சொக்க லிங்கனர் செய்யுள் நடையில் ‘சேய்த் தொண்டர் புராணம்’ என்னும் அருமையான நூலைப் பாடி முடித்தார். இப்புராணம் அண்மையில் வெளிவந்துள்ளது. இதன்கண் முருகவேளின தனியடியார் அறுபத் தறுவர் வரலாறும், தொகை அடியார் பன்னிருவர் வரலாறும் கூறப்பட்டுள. இப்புராணத்துக்கு அடிப் படையாக விளங்குவது புராண ஆசிரியரே இயற்றிய ‘சேய்த் தொண்டத் தொகை’; இது பின்வருமாறு :—

## சேய்த்தொண்டத் தொகை

1. *செந்தில்வாழ் அந்தணாதம் அடியார்க்கும் அடியேன்*
   தென்மலைய முனிவர்கரும் பகீரதற்கும் அடியேன்
   கந்தவேட் கினியமுசு குந்தனர்க் கடியேன
   கருதுடுப்பூர் நாகனர் அடியார்கரும் அடியேன்
   அந்தமிலசீர் நக்கீரர் அடியார்க்கும் அடியேன்
   *அருளார்நல் லியகோடர் ஔவையார்க் கடியேன்*
   எந்தைபிரான சேந்தனர் அடியார்க்கும் அடியேன
   எம்மான்எங் திருததணிகை அம்மானுக் காளே.

2. *கம்பை சூழ் காஞ்சிநகர் மாதவத்தின பயனய்க்*
   கந்தவேள் திருச்சரிதம் கடலுலகுக் களித்த
   நம்பெருமான கச்சியப்பர் அடியார்க்கும் அடியேன்
   நலந்திகழும் முருகம்மை அடியார்க்கும் அடியேன்
   இம்பரெலாம பரவுறுபொய் யாமொழியார்க் கடியேன
   *இளந்தமிழின் செழுஙகொண்டல எனஉலகம் பரவும்*
   எம்பெருமான் அருணகிரி நாதர்கரும் அடியேன
   எம்மான்எங் திருத்தணிகை அமமானுக் காளே.

---

வீரமுளர் விட்டகணை வீண்படுவ தில்லை;மன
ஈரமுளர் நறசெயலால், வெனறி யமையுமரோ.

3. குமரகுரு பரஅடிகள் அடியார்க்கும் அடியேன்
கோதில்சிவப் பிரகாசர் அடியார்க்கும் அடியேந்
திமிரமல இருளகற்று சிவஞானி தருமைத்
திருஞான சம்பந்த தேசிகர்க்கும் அடியேன்
அமுதகவி சம்பந்த சரணர்வர கவியென்
றறைமார்க்க சகாயர்குண சீலர்க்கும் அடியேன
எமதுசிதம் பரதேவர் அடியார்க்கும் அடியேன்
எம்மானஎங் திருத்தணிகை அம்மானுக் காளே.

4. வென்றிமா லைக்கவிஞர் அடியார்க்கும் அடியேன்
வியனபகழிக கூததர்தம தடியாாக்கும் அடியேன்
துன்றுபுகழ்ச்செங்கோட்டைக் கவிராஜர்க் கடியேன்
துகளறுச்சர்க் கசசியப்ப முநிவரர்க்கும் அடியேன்
நன்றுதிகழ் மாதவசுப பிரமணியர்க் கடியேன்
நவையில்சிதம் பரமுநிவர் அடியார்க்கும் அடியேன்
என்றும்எம துளஙகுடிகொள் கநதப்பர்க் கடியேன்
எம்மான்எந திருத்தணிகை அம்மானுக் காளே.

5. அரகரவேல் மயிலென்பார் எல்லார்க்கும் அடியேன்
ஆலயநற் றிருததொண்டர் அனைவர்க்கும் அடியேன்
முருகனையே பாடுவார் எலலார்க்கும் அடியேன்
முத்திநிலை பெறநாடி நித்தமுரு கையன
திருவருளை சிந்திபபார் அனைவர்க்கும் அடியேன்
திருத்தணியிற் பிறந்தவர்கள் எல்லார்க்கும் அடியேன்
இருகதிரைப புறஙகாணும் அழகுசுடர் வண்ணத்
தெம்மானஎந திருத்தணிகை அம்மானுக் காளே.

6. காவடியில் தேனபாலமற் றவைசுமந்து செலுத்திக்
காதனையே போற்றுவார் அடியார்ககும் அடியேன்

---

வல்லெருது கூாஙகொமபால வாகையுறும தனமையெனப
புல்லும் துணைபலமேல, பொன்னுயிர்கள் மாற்றுரே.

பாவலர்மா மணிபழநித் தலசரிதம் பகர்ந்த
பாலசுப் பிரமணியர் அடியார்க்கும் அடியேன்
நாவலர்தம் மாமணிசின னப்பர்க்கும், சாமி
நாதர்க்கும் நலமருவு சேய்த்தொண்டர் தம்குற்
றேவல்புரி தொண்டரடித் தொண்டர்ககும் அடியேன்
எம்மானஎங் திருத்தணிகை அம்மானுக் காளே.

7. குகனேரி யப்பர்தம தடியார்க்கும் அடியேன்
குறைவிலருள் ஞானவரோ தயர்தமக்கும் அடியேன்
புகழ்சேர் இராமலிங்க நாயனார்க் கடியேன்*
புனிதகவி குஞ்சரத்தின் அடியார்க்கும் அடியேன்
தகவருமாம் பழக்கவிஞர் அடியார்க்கும் அடியேன்
தண்டபா ணிப்பெரியார் அடியார்க்கும் அடியேன்
இகமிறைஞ்சும் குமரகுரு தாசர்க்கும் அடியேன்
எம்மானஎங் திருத்தணிகை அம்மானுக் காளே.

8. கல்லாடர் கடுவனிள எயினனார்க் கடியேன்
கருதருநல் லந்துவனார் பூதனார்க் கடியேன்
நல்லார்போற் றழிசியார் கேசவனார்க் கடியேன்
நவையறுநப பண்ணனார் அச்சுதனார்க் கடியேன்
வல்லாற்போற் றெருசேறைக் கவிராஜர்க் கடியேன்
மாசறுசிற் றம்பலநா டிகளடியார்க் கடியேன
எலலாமாய் இன்பமயில் ஏறிவிளை யாடும்
எம்மானஎங் திருத்தணிகை அம்மானுக் காளே.

9. தென்பழநிப பதிக்கலிசைச் சேவகனார்க் கடியேன்
சிவஞான தேசிகர்வைத் தியநாதர்க் கடியேன்
முனபருண கிரிநாதர் திருபபுகழில வியந்த
முடிவில்புகழ் சேர்சோம நாதனார்க் கடியேன்

---

சாலப் புகழ்கருதி சாதுநடம் ஆடுபவர்
கூலிக்கு வேலைசெயும் கொத்தனார் ஆவாரே

அன்பர்கெழு மேலகரம் பண்டாரத் தார், அண்
ணாமலையார், கவிவீர ராகவனார்க் கடியேன்
இன்புருவாம் தேவரா யப்பெரியார்க் கடியேன்
எம்மான்எங் திருத்தணிகை அம்மானுக் காளே.

10. நின்றசீர் நிரம்பஅழ கியசீலர்க் கடியேன்
நிகரறுவே தாந்தசுப பிரமணியர்க் கடியேன்
துன்றிருஞ்சீர் அழகுமுத்து நாயனார்க் கடியேன்
தோகைமயில் ஊர்பரமற் கினியதமிழ் நூல்கள்
நன்றியற்றிப் பூதவுடல் நீத்தரிய புகழாம்
நலவுடல்பெற் றினிதுலவும் இறந்துமிற வாதார்
என்றறிஞர் தொழுஞ்சீலர் எனைவர்க்கும் அடியேன்
எம்மான்எங் திருததணிகை அம்மானுக காளே.

11. நாரதர்சீர் செறிபோகர் நலவிடும்பர்க் கடியேன்
நவையில்பிர புடதேவர் முத்தப்பர்க் கடியேன்
சூரடுசேய் எழுந்தருளும் மாதலமான் மியங்கள்
சொற்றருள்பு ராணிகர்கள யாவர்க்கும் அடியேன்
பாரறியச சாற்றிடுமிச் சேய்த்தொண்டத தொகையிற்
பாடாது விடுபடட அடியாாகளும் அடியேன்
ஈரநிலத் தினிவருசேயத் தொணடர்கட்கும் அடியேன்
எம்மானஎங் திருத்தணிகை அம்மானுக் காளே.

21. வானோர்நத சீர்கொள்திருப புகழைஅச்சிட் டளவில்
மாணபுறுசுப பிரமணிய வேளஅடியார்க் கடியேன்
தானுய தனிக்குமரன திருவருளசார் சசசி
தாநகத நாயனார் அடியார்க்கும் அடியேன்
தேனாருங் கடம்பணிவார் அடிநீழல் அடைந்த
செல்லப்பன் காதலன மீனாட்சி தனயன்
தேனூரன் சொககலிஙகன அடிமைகேட் டுவப்பார்
திருத்தணிகை அம்மானுக் கன்பரா வாரே.

---

வளமை வனபபு குடிமை வலிமை
இளமை தமக்கிரஙகி ஏமன் விடு வானேயோ.

முருகவேளின் அடியார்களின் வரலாற்றை யாவரும் எளிதில் அறிந்து மகிழும்படி இவ்வசன நூல எழுகின்றது. புராணத்தில் அவ்வவ்வடியார்களின் வரலாறு அவரவர் முருக வேளொடு சம்பந்தப்பட்ட வரையில்தான் பெரும்பாலும் குறிக் கப்பட்டுளது; அவ்வாறே இவ்வசன நூலும், அவசியமான பிற குறிப்புக்களுடன், புராணத்திற் கூறபபட்ட அளவிலே நிற்கும்.

## 1. செந்தில் வாழ் அந்தணர்

செந்தில் வாழ் அந்தணர் திரிசுதந்திரர் எனப் பேர் பெறுவார். இவர்கள கஙகைக கரையில் தவஞ்செயது பூலோகம், சுவர்க்க லோகம், சத்திய லோகம் ஆகிய மூனறு உலகங்களிலுஞ் சென்று வசிககும் சுதந்திரத்தைப் பெற்ற காரணத்தால 'திரிசுதந்திரர்' எனபபெயர் பெற்றனர். திரிசுதந்திரா 78,000 பேர். இவர்களுள் 3000 போ சிதம்பரத்திலும், 2000 பேர் திருச்செநதூரிலும், பிறர் பிறதலஙகளிலும் சென்று அமர்ந்து இறைவனைப் பூசிப்பாராயினர். சூரன் செய்த கொடுமைகளைத் தாங்க முடியாது தவித்த தேவர்களின் வேண்டுகோளுககு இரஙகி முருகவேள், திருசசெந்தூரின பாசறை அமைத்துத் தங்கினர், அதுமுதல் திருசசெந்தூர் முருகவேளின் பிரபல தலஙகளுள் ஒன்றாயிற்று. அத்தலததில முருகவேளைப் பூசித்துப் பரவும் அந்தணர்கள திரிசுதந்திரர் (முக்காணிகள்); இவர்கள் கனவிலும் நனவிலும் கநத மூர்த்தியை மனமொழி மெய்களால் வணஙகும் மாண்பினர்; உருத்திர மாமணி ஒளிகொள் மார்பினர்; குகன் புகழ் செறியும் வாயினர்; நீற்றொளி விளங்கும் நெற்றியர்; கந்தனை நோக்கும் கண்ணினர்; அவன் புகழைக கேட்கும் செவியினர்; அவன் பாதங்களை இறைஞ்சும் சென்னியர்; ஞானக் கலைகளைக் கற்றவர்; தானமும், நன்கு

கூற்றததை வாவெனறு கூவியழைப் பாரேபோல்,
ஏற்றமுளர் தம்மை, எதிர்த்துய்ந்தார் இல்லையே.

இயற்றும் தகைமையர்; வசைஅறு மரபினர். சந்ததம் உலகினிற் சைவம் ஓங்கிட மந்திர முறையெலாம் புரியும் மாட்சியர்; விமலன் ஆலயத்து எழிலுறு பணியெலாம் இனிதின் ஆற்றியே வழிவழித் தொண்டராய் மகிழ்ந்து வாழ்பவர், செந்திற் பெருமானைக் காலம் முற்றிலும் வணங்கிக் களிப்புடன் வாழும் நியமத்தினர். வறுமையிலும் வாய்மை தவறுதவர்; *பெறுவன எல்லாம் ஐயனது திருவருட்பேறு என்று எண்ணி* இம்மை மறுமைப பயனை நாடி மாதவம் புரியும் மகத்துவம் வாய்ந்தவர்

" உங்களில் ஒருவனுய் இத்தலத்தில் உறைவேன் " *என்று செங்கை வேலவனே செப்பிய சிறப்பினைப் பெற்றவர்.* அனறும் இன்றும் என்றும் அறுமுக வேளின் அணுக்கத் தொணடராய அமைந்துள பேற்றினர்; இவர்களை அன்புடன் நினைபபவர் திரிமூர்த்திகளைப் பூசித்த பேற்றினைப் பெறுவர்.

" ஏவர்க ளாயினும் இவரை நெஞ்சத்துப்
பாவகம் செய்யினும் பண்பின் ஏத்தினும்
பூவடித் தாமரைப் போது போற்றினும்
தேவரோர் மூவர்க்கும் சிறப்பச செயதுள்ளார்."

—திருச்செந்தூர்ப் புராணம்.

திரிசுதந்தரர்களுடன் அபேதமாக நினறு முருகவேள் அருள்பாலிக்கும் காரணத்தால், அவருக்குத் 'திரிசுதந்திரா பேத மூர்த்தி' எனறு பெயர் போந்தது.

[சுப்ரமண்ய பராக்ரமம்].

(தொடரும்)

---

முன்புறத்திற் குற்றமது மூவா யிரஞ்செய்தால்,
பின்புறத்தில் மூண்டு வெருமுட்டை யாகுமரோ.

தேவிதார்சர்கள் 26

## பாபநாச நமசிவாயம்

(ரஸபதி)

கூடல் புனவாயில் குற்றுலம் ஆப்பனூர்
ஏடகம் நெல்வேலி ராமேசம் - ஆடானை,
தென்பரங் குன்றம், சுழியல், தெனதிருப்புத் தூர், காளை,
வன் கொடுங் குன்றம், பூ வணம்.

எனவ்ரும் பாடல பெற்ற பதினன்கு திருப்பதிகளை யுடையது பாண்டி நாடு. அழகிய கலைமகள் அரியணை ஏறிய அந்நாட்டில, அருந்தமிழ் வளர்த்த அகத்தியர் வாழும் மா பெரும் பொதிகை மலையுளது.

அம் மலையின் அடிவாரததில் இருக்கிறது, விக்கிரம சிங்க புரம். அந்நகரில், முக்களா லிங்கர் என்ற ஒரு உத்தமர் இருந்தார். அவர், பாபநாச புராணம் பாடியவர். அவர்க்குப் பிள்ளைகள இருவர் பிறநதனர். ஒருவர் ஆநந்தக் கூத்தா. மற்றெருவர் நமசிவாயர்.

கற்கத் தக்கவைகளை, மக்கள் இருவரும் கற்றனர். கற்ற வாறு, ஒழுக்கம் பெற்று உயர்ந்தனர். மயிலம்மையை, ஆநந்தக் கூத்தா மணந்தார்.

ஊர்க்குப் புறத்தில், பாபநாசம் எனும் பதியுளது. அத தலததில், இனப வடிவான உலகம்மை, கோயில் கொண்டு எழுந்தருளி யிருககிருள். நாள் தவருமல், அநத ஆலயததிற்கு நமசிவாயர் செல்வார்.

தாமிர பரணியில் நீராடுவார். முதல்வி வழிபாட்டை முடிப்பார். கோயிலுக்குள் செல்வார். உள்ளததை வசீகரிதத உலகம்மை திருவுருவை, உணர்ந்து நெகிழ்ந்து உருகுவார். கண்ணீர் வாரக கசிந்து, அமுதினும் இனிககும் அருந்தமிழப பாக்களால, அம்மை திருவடிகளை அர்சசிப்பார்.

---

மற்றவரைக் குற்றம் மதித்துரைப்பார், நம்மையுமே
*பிறறை நிலைநின று பேசுவரென் றெணணுரோ.*

பேயோ எனக்குழறும் பேதாய் ! உனக்குமொரு
வாயோ?என் றென்னையிகழ் வாயோ?மகிழ் வாயோ ?
தூயோர் தொழுமுலகே ! சொல்வதெலாம் சொல்வேன்
காயோ பழமோ?நீ கட்டளைசெய் காரியமே !

என்று பாடிப் பணிந்து திரும்புவார். நாள்தோறும் இந்த நடை.

பரம்பரைச் செல்வ ராதலின், குடும்பக் காப்பிற்குக் குறை வில்லை. ஆர்வம் கொண்டு அணுகியவர்க்கு இலக்கியம், இலக்கணம், சித்தாந்தம் முதலியவைகளைக் கனிவு காட்டிக் கற்பிப்பார். இபபடியே அவரது பொழுது புனிதமாகப் போகிறது.

முக்களா லிங்கர், நமசிவாயர்க்கு மணமுடிக்க நினைததார்.

கலியாணம் என்ற சொல்லிற்குக் கால் கட்டு என்ற பொருள உண்டு. பாவையரை மணந்தவா சுதந்தரம், பறி முதலாய்விடும். இதற்கு இணங்கவில்லை எனமனம் எனறு, நமசிவாயர், தன் கருததைக் குறிபபாகத் தநதையிடம் கூறினுர்.

நமசிவாயும்! அவசரத் தீர்மானம், அபாயகரம். பிரமசரியம் காத்தவாகள, இலலற நல்லறம் ஏற்க வேண்டும், அதன் பிறகுதான், சந்நியாசம். இதுதான் மரபு. கலைகளைக் கருத் தூனறிக் கற்றவன் நீ. முன்னோர் வழியைப் பினபற்றுவதுதான் முறை என்று, முககளா லிஙகர் மூச்சுவிடாது பேசினுர்.

தந்தை சொலமிக்க மந்திரம் இல்லை. அப்பாவின அற வுரை இபபடியானுல, எபபடி அவரை மறுப்பது? எனறு எண்ணி மனம் ஏஙகியது.

உடன் பட்டதே போதும் எனறு உவந்த தந்தை, மங்கை ஒருத்தியை அவர்க்கு மணம் செய்து வைததார்.

நமசிவாயா இலலற வாழ்வில், பெண் மகவு ஒன்று பிறந்தது ; வளர்பிறை யெனும்படி வளர்நதது.

மனையற வாழ்விலும், அவர் உலகம்மையை மறந்திலர். ஆலயத்திற்கு மாலையில் செல்வார்; தற்பரியைத் தரிசிப்பார்.

---

அடுத்தார்க்(கு) அளித்தேழை ஆனவர்கள் இல்லை;
மடுத்த கிணற்றுநீர், வற்ரு சுரந்துறுமே.

விமலை கோயிலிலிருந்து வெளிவருவார். கோபுர வாயிலில் சிறிதுநேரம் இருப்பார். தாம்பூலம் தரிப்பார். பிறகு புறப் படுவார். சிந்தனை இடையில் சிதையாதிருப்ப,

பெண்டாட்டி பிள்ளையெனப் பேயாட்டம் காட்டி,எனைக்
கொண்டாட்டு வித்தவனைக் கொண்டாட வேண்டாவோ ?
மிண்டாட்டுப் பாழ்ங்கலியால் வீணுடம் ஆட்டி,எனை
உண்டாட்ட வேணடா, உலகுடைய மாதாவே !

பெண்மையென்றும் ஆண்மையென்றும் பேதமென்றும்
சாதியெல்லாம்
தண்மையென்றும், நெஞ்சிலொரு தன்மையென்றும்
காண்பாரால ;
திண்மையென்று பல்பலவும் தேர்வார், தெளிந்தபடி
உண்மையென்று காண்பேன் ? உலகுடைய மாதாவே !

என்று, உலகம்மை மேல கவனம் செய்த பாடல்களை, பாடிய படியே வீட்டிற்கு வருவார். நாள்தோறும் இதே நிலை.

"அமலையை ஆலயத்தில் ஒருநாள் ஆராதித்தார். தம் புனித வீடு நோக்கிப் புறப்பட்டார்.

விட்டிலே ஒதது விளக்கிலே வீழும்வினைக்
கட்டிலே வீழ்நது,தவம் காண்கிலன்என் றேங்குவனே ?
தட்டிலே ஏழைமனம், சஞ்சாரப் பட்சிமயல்
ஒட்டிலே வீழா(து), உலகுடைய மாதாவே !

என்று பழைய வழககபபடி பாடிக்கொண்டே வருகிறார்.

ஒருவர் தன்னைத் தொடர்வது போன்ற உணர்ச்சி உண்டா யிற்று. திரும்பி நோக்கினார். எவரும் இல்லை. தம்பல எச் சிலைத் துப்பிவிட்டு, மேலும் புனித தேவியைப் பாடியபடியே புறப்பட்டார்.

பொனனைநொந்து கொண்டாலப்
பொன்வருமோ ? முனனைவினை
தன்னைநொந்து கொண்டால்,அத
தன்மைநனமை ஆயிடுமோ ?

---

தந்தரத்தை எண்ணித் தருமம்செய் வார்;வாங்க
வந்தார் தரமறிந்தால், வாய்ப்பிழந்தார் ஆவாரே.

என்னைநொந்து கொள்கிலனால் ;
இனபமன்றித் துனபம்வரின்
உன்னைநொந்து கொள்வேன்,
உலகுடைய மாதாவே!

என்று பாடி, தம்பல எச்சிலைத் துபபினார்.

என்ன இது? யார் பின்புறத்தில் வருவது? வரும் அசைவு தெரிகிறது? திரும்பி நோக்கினார். எவரும் இல்லை. வெறும் பிரமையா என்ன? இதே நிலையில், தம் மாளிகையை அடைந்தார்.

மறுநாள் வைகறை நேரம். திருப்பள்ளி யெழுச்சிக்கு என்று அர்ச்சகர் புனித சந்நிதியுள் புகுந்தார். ஐயோ என்று அலறினார். என்ன நடந்தது?

உலகம்மை ஆடையில், பல இடஙகளில் தம்பல எச்சில். அதிர்ந்தது மனம். அர்ச்சகர் ஓடினார். ஆலயத் தானிகரிடம் செய்தியை அறிவித்தார். தவியாய்த் தவிக்கிறார் அந்தத் தானிகர். அனறு மதுரையில் இருநத குறுநில மனனர், பாப நாசப் பதிககு வந்திருககிறார். இச்செய்தி, அவர் செவிவரை சென்றது. அதனால் அவர்க்கு ஆத்திரம் பெரிதும் அதிகரித்தது. விரைநதார். புனிதை சந்நிதியுள் புகுநதார். தம்பல எசசில் கறை, விமலை உடை எங்கும் விரவி யிருந்தது.

அட பாவமே! எவர் செய்த செயல் இது? தகுதியிலா இச்செயல செயதாரை, அவசியம் தணடிக்க வேண்டும்! என்று கடிந்து பற்கடித்துக கூறினார்.

அர்ச்சகர்கள் மூலம் சம்புரோட்சணம் செய்தார். அதன் பின், நித்திய ஆராதனை நிகழ்நதது.

அனறு இரவு அரசர், எனனவெல்லாமோ எண்ணுகிறார். இப்படியும் ஒரு துரோகதரா? அம்பிகை சந்நிதியிலா இநத அட்டூழியம்? நம்மை அறியாமல், நாட்டில் இபபடி எத்தனை குற்றஙகள நடைபெறுகின்றதோ எனறு உணாந்த அவர் உள்ளம் உடைந்தது. உறககம் கொள்ளவில்லை. கண்ணீர் வடிக்கிறார் காவலா.

---

கொடுததபணம் கேட்டதும், கோதின்றித தாம்தருவர்;
அடுததளிபபம் எனருல, அரியபகை வந்துறுமே.

இர்வு மணி மூன்று. அயர்ச்சி பிறந்தது. அவரை அறியாது கண்கள் மூடின. கனவில் தேவி காட்சி ஆயினள்.

விக்ரமசிங்கபுர பக்தன் நமசிவாயன் நாடோறும் எம்மைச் சேவிகக வருபவன். பரம அன்பொடு எம்மைப் பாடியபடி செலபவன். உள்ளம் உருக்கும் அவன் பாடல்கள். கேட்கும் வேட்கையில், இரவு பினதொடர்ந்தேம். அதை அவன் அறியான். தம்பல எச்சிலைப் பலதரம் துபபினன. அந்த நேரத்தில், எமககு எவ்வளவு இன்பமாயிருந்தது தெரியுமா!

அவனே வருத்தாதே! அவன பாடிய பாடல்களை ஓதுவார் எல்லாம் உயர்கதி யடைவர். நீயும் மனனம் செய!* வாழ அது வழி.

வேந்தர் திடுக்கிட்டு விழித்தார். வியர்த்தது தேகம். எழுந்தார். கடனே முடிததார். இறைவியை ஏததி இறைஞ்சினர். ஏவலரைக் கூபபிட்டார். விக்ரம சிங்கபுர நமசிவாயரை அழைத்து வாருங்கள எனறு ஆணையிடடார்.

அவரைப் பணியாட்கள அழைத்து வந்தனர்.

ஐய! நேற்று இரவு, உலகம்மை உடையில் நீர் தம்பலம் உமிழ்ந்ததாக அறிகிறேம். அடுக்குமா அசசெயல்? அதிர்ந்தது அரசர் குரல்.

என்ன அநுசிதம்! நானு அது செய்வேன்? அந்த அக்கிரமம் செயதானே விடப்படாது என்று, குமுறி நமசிவாயர் கூவினர்.

விடமாட்டேன்! அவ்வளவு சுலபமாக விட்டுவிட மாட்டேன! முதலில் நீர் துப்பவில்லை எனபது தெளிவாக வேணடும். இங்கேயே இரும்! அழைக்கிறபோது, எமது ஆட்களொடு வாரும் எனறு கர்ஜிதது அரசா அங்கிருந்து அகன்றர்.

ஆலயத்திற்குச சென்றர். ஒரு பூசசெண்டை எடுத்தார். உலகம்மை திருக்கரத்தில் வைத்து, அதை நூறு பொன் நூலால கட்டச் செயதார். ஒடுங்கள்! நமசிவாயரை அழைத்து வாருங்கள் எனறு, ஏவலாகளை ஏவினர்.

அடுத்த கணத்தில் நமசிவாயர் வந்தார்.

---

வாய்க்குச் சுவையா விதைவறுபபார் போல், சில்லோர்
வாய்தத உடலின்பில் வாழ்நாள் ஒழிவாரே.

இத்தவறு நீர் செய்யவில்லை எனபது மெய்யாமேல், தேவி மேல் ஒரு பிரபந்தம் பாடும்! அம்பிகை திருக்கரசசெண்டு தாவி வந்து உம் கையில் தங்கவேண்டும்! இதுதான நிபந்தனை என்றார் மன்னர்.

தாயே! இப்படியும் ஒரு ஆடலா! அம்பா என்று உண் முகம் ஆயினூா நமசிவாயர்.

"என்றைக்கும் நீ துணை அம்மா! என் ஆவி இறந்துவிடும்
அன்றைக்கும், ஓடிவந(து) அஞ்சு லெனபாய்!"

"காணக் கிடைததது நின்திருக் கோலம்;
என் கள்ளமனம்
பூணக் கிடைத்ததுன பொன்மலர்த்தாள்;
உன்னைப போற்றி செயது
பேணக் கிடைத்த(து) உலகெனும் பேர்;
பெற்ற பேறு கண்டு
நாணக கிடைதத தம்மா! அதை யென்ன
நான் சொலவதே."

பாடுகிறார்; மேலும் பாடிக் கொண்டே யிருக்கிறார்.

"பொழுது கழிந்தது வீணே; எனக்கென்ன
புததி; உனைத
தொழுது பணிந்து துதிததிலனே;
இதைச சொலலிச சொல்லி
அழுது புலம்பில் விடுமோ யமன்?
இனி ஆயினும், என்
பழுது களைநது புரப்பாய், உலகம்
படைபபவளே!"

இபபடியே கலிததுறை யநதாதி நூறு பாடல் பாடினூர். பாட்டிற்கு ஒரு நூலாக அறுநதது. நூறுவது பாடலில, இறுதி யான பொனனூலும் பட்டெனறு அறுநதது. துள்ளிய செணடு கவிஞர் கரத்தில வநது கவினியது கண்டவர் மனங்கள் களித் தன. காவலா, நமசிவாயர் காலில் விழுநதார்.

---

அன்புநிழல் காட்டி,நலலோர் தம்மை யரவணைபபோர்
இனபம் உலகில் இணைந்திருப்பர் கண்டாமே.

அன்பரே! உமது அருமையை முன்னரே அறிவேன்! உலகம்மையும் உணர்த்தினள். அந்த அருமையை அனை வரும் அறிய வேண்டும் என்றே நாடகம் இப்படி நடத்தினேன். வாழ்க நீர் என்று மறுபடியும் வணங்கினர். அதன் பிறகு, நமசி வாயர் அன்பின் பெருக்கை நாடு முழுதும் அறிந்தது.

ஆண்டுகள் பல இடையில உருண்டு ஓடின. ஒரு நாள் வயிறு சிறிது வலி செய்தது. வரவர அந்நோய் பெருகி வளர்ந்தது. உபாதை பொறுக்க முடியவில்லை.

''விடு!போந் தவன்என அடியான் என்று,
விலக்குவையோ ?
கொடுபோய், நரகில குளிப்பாட்டு! போஎன்று
கூறுவையோ ?
அடுபோர் அயிலமுத் தலைசூல் நமன்செயும்
ஆக்கினைக்குள
படுபோதில், என்சொலலு வாய்?உல கே!உன்
பராக்(கு) ஒழிந்தே''
துடைத்தா யிலைவன் கலிநோயை; என்னைத்
தொழும்பு செய்யப்
படைததா யிலை,வந்து பார்த்தா யிலை;உள்ளப்
பளளததில விட்(டு)
அடைத்தா யிலைஉன கருணைபர வாகத்தை ;
ஐவரை விட(டு)
உடைத்தாய . உலகம்ம ; நன்ருயிலை என்
உயிர்ப்பயிரே !''

என்று பாடியழுது பதைத்தார். மென்மேலும் வயிற்று நோய் வருத்த. இதைவிட இறந்து விடலாமே என்று மனம் எண்ணி யது. எழுநதார். நடந்தார். இனிய கலியாண தீர்த்தத்தில் இறங்கினுர்.

தவறு செயயாதே! கர்மத்தை அனுபவித்துக் கழித்துவிடு! இனி ஒரு பிறப்பு இராது; அது குறிததே வாளா இருக்கின ரோம் எனறு, அநதரத்தில பிறந்தது அசரீரி.

---

என்குற்றம் காணுர் எவருமெனறே, சான்ருேர்கள்
என்றும் தவறு செயார், சாட்சியிறை என்பாரே.

அது கேட்டதும், அப்படியா தாயே! புனித நின் கருணை புரியவில்லை ; அந்த அறியாமையால் அயர்ந்தேன். வேண்டா அம்மா! இனி ஒரு பிறப்பு வேண்டவே வேண்டா! இறுதியில், எளியேனை உடலில் இருந்து எடு! உனது அடி நிழலில இடு! என்று வீரிட்டுக் கூவி விண்ணப்பித்தார். சில நாள்களில், உபத்ரவித்த அந்த நோய் ஒழிந்தது.

* * * * *

ஒருநாள், வாழ்க்கைத் துணைவி இவ் வையகத்தை மறந்தாள். அதுவும் உலகம்மையின் அருள் என்று, நமசிவாயர் ஆறி மனம் தேறினர். எனினும், மகளைக் கண்காணிக்கும் பொறுப்பு வளர்ந்தது. பருவம் எய்தினள் அப்பாவை.

ஒருநாள் வழக்கப்படி ஆலயத்திற்குச் சென்றார். சமயலை முடித்தாள் மகள். இரவு மணி எட்டு. மாதவிடாய் ஆயினள் மகள். உடனே எதிர் வீட்டிற்குச் சென்றாள்.

அம்மா! சமையல் செய்துவிட்டேன. வீட்டுள் நுழைவது கூடாது. என அப்பாவிற்குத் தயவு செய்து அன்னம் பறிமாறுங்கள்! என்று கெஞ்சிக் கொஞ்சினள் குமரி.

அப்படியே செய்கிறேன் என்று அந்த அம்மை, சிறிது நேரத்தில் நமசிவாயர் திருமாளிகையை நோக்கினள்.

புலவர் வாயலம்பிக் கொப்புளிக்கிறார். வாருங்கள்! பரிமாறுகிறேன என்று ஓடி வந்தாள்.

என்ன அம்மா செய்தி! உணவை உண்டேனே!

யார் பரிமாறியது ?

ஏன், என் மகள்தான்!

பொய் சொல்லுகிறீர்கள்! அவள் வீட்டிற்கு வரப்படாது. வந்து என்னைத் தூண்டினள். வந்தேன். நீரே பரிமாறிக் கொண்டீரா ?

என்ன அம்மா நீ சொல்வது ? என்று, மகளை அழைத்தபடி உள் நுழைந்தார். அங்கே மகள இல்லை. ஆயினும், கலகல நகை, வளையல் ஒலியுடன கலந்து ஒலித்தது.

---

நற்றவர்கள் சூதாட்டம் நண்ணுறர்கள், பாரதப்போர்
உற்றதனை யெண்ணி உளமடுங்கு கின்றுரே.

நமசிவாயர் வியந்தார். உலகம்மையே! இதுவும் உனது ஆடலா அம்பா! என்று பாடி மகிழ்ந்து பரவினுர்.

காலமும் நேரமும் ஒததுக் கொண்டது. தக்கவரன் ஒருவனுக்கு, தன் மகளே மணத்தில் அளித்தார். அதன பின் புனித தல யாததிரை எனறு புறப்பட்டார். சிறந்த தலங்களேச் சேவிததார். இராமேசசுரத்தை அடைந்தார். இராமநாதரை, பர்வத வர்ததனியைப் பணிந்தார்.

சேதுபதியை இறுதியிற் சேவிக்க வேண்டும். அதுதான் அன்றிருந்த சம்பிரதாயம். அது கருதி, மன்னரைப் பேட்டி காண, பல வகையில் முயன்ருர். பயன இலலே. விருந்தியது மனம்.

"முத்தலே சிநதும் பொருநா நதிததுறை மூழ்கி எழுந்(து,)
அததலே நினறு விடாயாறி, கலவி அளேநது, நறும்
கொத்தலர் சண்பகக் காவோடு நின்று குலாவியயான்,
இத்தலே வந்து. கடைத்தலே காததல் இளநதலேயே!"

என்று பாடினர். இதைக கேள்வியுற்ற சேதுபதி விரைந்தார். நமசிவாயரை வரவேற்ருர். உவநது கொணடாடி உபசரித்தார்.

அரசர் சேதுபதி, ஒருநாள் நமசிவாயர் அருகில் இருக்கிருர். ஐயா! அம்பிகையின நிறையருள பெற்றவர் தேவரீர். அவள் அருளாக்கத்தை அடியேன அறியுமாறு, வழியொனறு செய்யுங்கள் என்று வணங்கிருர்.

நமசிவாயர், பார்த்திபர் பககத்தில் நின்றிருந்த அடைப்பைக்காரனேப பாரத்தார். இங்கே வா! எனருர். அஞ்சி அஞ்சி, அவன அவரை அணுகினன். வாயைததிற என்ருர். திறந்த வாயில் நீறிட்டார்.

கண்ணே மூடினன. மின்னியது அவன முகம். கவினிய அவன் நெற்றியில மஞ்சள் காப்பிட்டார். உலகாம்பிகை மேல், பாடு ஒரு பாடல் எனறு பணிந்தார். பாடியே அறியாத அவன வாய், இப்போது பாட ஆரம்பித்தது.

---

காப்பாரை ஏய்த்து, வற்றல் கவ்வும் பறவைகள்போல்,
காப்பார் பொருள் திருடப் பார்ப்பார் கலதிகளே.

" பாவுக்குள்ளே, அரன் பாதிக்குள்ளே, பன்னிரண்டுமடல்
பூவுக்குள்ளே, நவ கோணத்திலே, தென்பொதியவரைச்
சார்புக்குள்ளே வந்து நினறதல்லால, உலகாம்பிகைஎன
நாவுக்குள்ளே வந்து நின்ருள், தன்கீர்த்தி நடாத்தஎனறே!"

என்ருன், மன்னர் வியநது மகிழ்ந்தார். அதனபின அவர் தந்த விருதுகளுடன, புலவர் மகிழ்ந்து புறப்பட்டார. ஊர் வந்து சேர்ந்தார் உலகாம்பிகையைப் பலகாலம் வழிபட்டு இருந்தார்.

ஒருநாள், உரியவர்களை அழைத்தார். அம்பாள் என்னை அழைக்கின்ருள் லோகாம்பிகையை எண்ணுங்கள்! பக்தி பண்ணுங்கள்! வாழ்விபபாள் அந்த வரதசிவை எனருர். என்ன இப்படிச சொல்கிறீர்கள் எனருர்கள அன்பர்கள்.

" பாரிலே நமக்கொருவர் சரியோ; தெனறல
பருவத்தில வருதாம்பர பரணி யாற்று
நீரிலே மூழ்கிவினை ஒழிநதேம்; சைவ
நெறியிலே நினறுநிலை பெறறேம்; சிங்கை
ஊரிலே குடியிருந்தேம்; கீர்த்தி
உலகமெலாம் புகழநதேதத, உலகமாதின்
பேரிலே கவிதையெலாம் சொனனேம், சொனனேம்;
பிறப்பிலெழு பிறப்புமறப பெறுகின் றேமே!"

ஹஹ்ஹாஹா எனறு நகைத்தார்.

அதே சமயத்தில் உடலில் இருநது ஒளி மயமாக, புனித அவர் உயிர் புறபபட்டது. உலகாம்பாள் அடிமலர் நிழலில், கலந்து புகுந்து கரநதது.

புனித இவரது தமயனுர் புதல்வர்தான சிவஞான போத பாஷியம் செயத சிவஞானயோகிகள.

வாழ்க தேவிதாசர்கள்!

ஓம்.

---

கட்டித தழுவிடினும், கூட்டுநிலாப் போல்கயவர்
எட்டி யிருப்பதெணி, யேங்கலினறி நீங்குதியே.

## UNIVERSALISM OF LIFE AND BEING.

The celebrations of the centenary of Dr. Tagore all over the thinking world have emphasised the basic foundations of all true culture, the basic unity of Man in God and of God in Man, nay in Life. The philosophy of Dr. Tagore has been proclaimed, expounded and lived on from the days of the vedas and the advaitic aphorisms of the Upånishads. Heaven and earth have been recognised as complimentary expressions of a divine single unity.

The great mother saint of south India, Avvayar has stressed the way of successful spiritual life for every seeker after truth. As the Lord lives in every Jiva, she exhorts every one to see, at any rate to attempt to see the Lord in every other being, and so to give in a measure, small as it may be, of that love due unto Him to every other being This would undoubtedly help in changing the phase of the warring world into one of harmony and peace atleast to a recognisable extent.

From the Upanishads to all down the saints upto Sri Bharathiar, the latest of the Tamil Siddhars, the religion as expounded in the Vedas and the Gita and the philosophy and the experience of all the savants, lead man but to one conclusion in the language of the Siddhars.

ஒன்றும் ஒனறும் ஒன்றுமே உலகனைத்தும் ஒனறுமே
அன்றுமின்றும் ஒன்றுமே அனுதியான தொன்றுமே
கனலநிறை செம்பொனை களிம்பறுதது நாட்டினுல்
அன்று தெய்வம் உம்முளே அறிந்ததே சிவாயமே.
எங்குமுள்ள ஈசனுர் எம்முடல புகுந்தபினபு
பங்குகூறு பேசுவார் பாடு சென்றணுகிலார்
எங்கள் தெய்வம் உங்கள தெய்வம் எனறு பேதமுள்ளதோ
உஙகள் பேதமன்றி அந்த உணமைபேத மில்லையே
உண்மையான தெனறதொனறு உற்றுநோககி உம்முளே
வண்மையான வாசியோடு வாழத்தி ஏதத வல்லிரேல்
தணமை பெற்றிருக்கலாம் தவமும் வநது நேரிடும்
கர்ம தர்மமான ஈசர் காக்ஷி தானும் காணுமே.

The teaching of the saints may be summarised for purposes of clarity.

That one which is latent and in hiding in every one is only one That alone exists, no second. Eradicate the soul from the shortcomings of selfishness and ahankara; and this you can do by an all pervading love; then you will discover the Lord of Light in your heart who is omnipresent and omniscient God-love manifests itself in many forms and ways but it is only one in essence. The ignorant and unknowing make a thousand gods made of their own differentiation, which is really non-existent, but wisdom knows and sees but One, the advaitic unity of the world The forms arise but as phases of the one Formless. He who knows and lives and has his being in this sense of unity which lies in and beyond every form, is the true citizen of the Universe and such a one is Eternal. So was, is and will be Dr. Tagore. —*Thiruppugal Mani.*

பூதம் ஐந்தொடு வேள்வி ஐந்து
புலன்கள் ஐந்து பொறிகளால்
ஏதம் ஒன்றும் இலாத வண்கையி
னார்கள் வாழ் திருக்கோட்டியூர்
நாதனை, நரசிங்கனை நவின்(று)
ஏத்துவார்கள் உழக்கிய
பாத தூளி படுதால், இவ்
உலகம் பாக்கியம் செய்ததே!

# Coffee
Ours for Quality

RAW ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS) LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 113




குடை மார்க் பினுயில்
(சிறந்த கிருமி நாசினி)

*தயாரிப்பாளர்:*

ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49. சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 2510

*விநியோகஸ்தர்கள்:*

கார் & கம்பெனி
129, மூர் தெரு
சென்னை-1. டெலிபோன்: 2058


.அமிர்தவசனி சந்தாதார்கட்கு வேண்டுகோள்:

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைந்தபடியால்,
?யை கூர்ந்து பிலவ வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப்
படுத்துகிறோம் வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.


**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.**

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65. Tirupalli Street, Madras-1,
& Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 13<br>இதழ்: 3 | பிலவ ஹு ஆனி மீ<br>ஜூன் — ஜூலை '61 | வருட சந்தா<br>ரூ. 3-00 |

முதுவேதியரால் தடுத்தாளப் பெற்ற சுந்தரர்

பக்கம் 100